ISSN 1391-9504

Vijey விஜய்

# விஜய்

16.11.2011 - மலர் 08, இதழ் 37



## 2013 இல் சூரிய புயலால் பூமிக்கு ஆபத்து...?



## உலகப் புகழ் சிறுவர் கதைகளும் எழுத்தாளர்களும்

## மகாவலி கங்கையும் அதன் நீர்த்தேக்கங்களும்

விலை ரூபா 15/-

# பாடசாலை நேர அதிகரிப்பு தேவைதானா?

பாடசாலை நேரத்தை மாலை 3 மணிவரை நீடிப்பதற்கான தீர்மானம் விரைவில் எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் தெரிவித்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அண்மைக்காலங்களில் உயர் மட்டங்களில் எடுக்கப்பட்டு வருகின்ற தன்னிச்சையான தீர்மானங்களில் இதுவும் ஒன்றாகவே கருதவேண்டியுள்ளது. உண்மையில்,பாடசாலை பருவத்திலுள்ள மாணவர்களின் மனநிலையை சரிவர உணர்ந்த எவருமே இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவிக்க மாட்டார்கள்.

உருப்படியான, பயனுள்ள பாடத்திட்டமொன்றை அமைப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்குப் பதிலாக, இவ்வாறு இளம் பராயத்து பிள்ளைகளை வருத்தும் வகையிலான தீர்மானங்கள் எடுப்பதையிட்டு கல்வி அமைச்சு மேலும் சற்று சிந்தித்து தமது முடிவை மாற்றிக்கொண்டால் நன்றாக இருக்கும். பாடசாலை நேரத்தை அதிகரிக்கும் தீர்மானத்தால் மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்கள், பெற்றோர்கள் என அனைவருமே பாதிப்புக்களை எதிர்நோக்க நேரிடும். மொத்தத்தில் இதுவொரு சமூகப் பாதிப்பாகவே அமைந்துவிடும்.

ஏனெனில், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் ஆகியோர் ஒருவரில் ஒருவர் தங்கியிருப்பவர்களாகவே இருக்கின்றனர். இவர்கள் அனைவரதும் ஒன்றித்த தியாகமே எதிர்காலத்திற்கான நல்லதொரு மாணவ சமூகம் உருவாக வழியை ஏற்படுத்துகின்றது. இதில் யாரேனும் ஒரு தரப்பு மன உளைச்சலுக்கு ஆளாயினும் அது ஏனையவர்களையும் பாதிக்கின்றது. அந்தவகையில், பாடசாலை நேர அதிகரிப்பானது மன உளைச்சலை ஏற்படுத்தி கல்வி சமூகத்தையே அது சீரழிப்பதாக அமைந்துவிடும்.

எந்தவொரு விடயத்தை அமுல்படுத்துவதற்கோ அல்லது தீர்மானிப்பதற்கோ முன்னர் அதிலுள்ள நடைமுறை சிக்கல்களை அவதானிப்பது அத்தியாவசியமானதாகும்.

பாடசாலை மாணவப் பருவமானது, வாழ்க்கையின் ஆரம்பக்கட்டமாகும். அந்த பிஞ்சு உள்ளங்களை நாம் கருணை உள்ளம் கொண்டு நோக்குதல்வேண்டும். ஏற்கனவே மாணவ பருவத்தினர் தமது மாலை நேர மணித்தியாலங்களை தொலைத்துவிட்டு

(3ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மியூரனின் படையணி

இரத்தம் சிந்தாமல் நாட்டின் எஞ்சிய பிரதேசங்களைக் கைப்பற்றுவதே பிரித்தானியர்களின் எதிர்பார்ப்பாக இருந்தது. அதனை செயற்படுத்துவதற்கு கொழும்பிலுள்ள ஒல்லாந்த ஆள்பதிக்கு பாதுகாப்பு வழங்குவதோடு, அதிக கொடுப்பனவுகளை வழங்கவும் சென்னையில் உள்ள ஆங்கில ஆட்சியாளர்கள் முயற்சித்தனர். இதுகுறித்து 'ஹோர்பார்ட்' ஒரு செய்தியை ஆள்பதியிடம் கூறினார். அதாவது, கோட்டையை எதிரிகள் சுற்றி வளைக்கும்போது, அதனை பாதுகாப்பதற்காக வந்த மியூரனின் படையணியை பிரித்தானிய அரசு தனதாக்கிக் கொள்வதாக அறிவிக்கச் சொன்னார்.


இந்த படையணியை பிரித்தானியா தமதுடைமை ஆக்குவது தூரநோக்கு சிந்தனைக்கு ஏற்றதாகவும் இருந்தது. இது ஸ்கொச் இனத்தவரும் கலாநிதியுமாகிய 'ஹியுக்லெக் ஹோர்ன்' என்பவரின் நடவடிக்கையாகும். பிற்காலத்தில் இவர் இலங்கையின் முதலாவது பிரதம செயலாளராகத் திகழ்ந்தார். ஒல்லாந்தர் மீது கோபம் கொண்ட இப்படையணியின் உரிமையாளரான மியூரனின் கட்டளைத் தளபதியோடு ஹியுக்லெக் ஹோர்ன் நட்புறவு பூண்டார். இதேவேளை, மியூரனின் படையணியை ஆங்கிலேயர் பயன்படுத்தினால் இலங்கையை மிகக் குறைந்த செலவில் மிக இலகுவாக கைப்பற்ற முடியும் என ஹோர்ன் மனதில் எண்ணமொன்று உதயமாகியது. இத்தகைய சிந்தனை தோன்றியதும் அவர் அந்த யோசனையை ஆங்கில கெபினட் எனும் நிறைவேற்று ஆலோசனை சபைக்கு முன்வைத்தார்.

கி.பி.1795 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி சுவிட்சர்லாந்தின் நியூவட்டால் எனும் இடத்தில் இந்த படையணியை குத்தகைக்கு ஆங்கிலேயர்கள் பெற்றுக்கொண்டனர். இந்நிலையில் 'ஹியுக்லெக் ஹோர்ன்' மியூரன் கட்டளைத் தளபதியின் இந்தியாவிற்கு வருவதற்கான அவரது விருப்பத்தையும் அறிந்துகொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த. சா/தரப் பரீட்சை:

# 550,000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தோற்றவுள்ளனர்



இவ்வாண்டுக்கான (2011) க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு நாடளாவிய ரீதியிலிருந்து இம்முறை 550,000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் விண்ணப்பித்திருப்பதாக, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார். எதிர்வரும் டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி க.பொ.த. சா/தரப் பரீட்சை ஆரம்பமாகவுள்ளதுடன், 3,000 இற்கும் மேற்பட்ட பரீட்சை மத்தியநிலையங்களில் பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மாணவர் சீருடைத்துணிக்காக 1,054 மில்லியன் ரூபா ஒதுக்கீடு



***நாட்டின் அரசாங்கப் பாடசாலை மாணவர்களுக்கு எதிர்வரும் வருடத்திற்கான இலவச சீருடைத்துணியை இறக்குமதி செய்வதற்காக 1,054 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அறியக்கிடைக்கின்றது.***

***இதன்படி; 5,810,000 மீற்றர் வெள்ளைத் துணி, 980,000 மீற்றர் வெள்ளைக் காற்சட்டைத்துணி, 777,000 மீற்றர் நீல நிறக் காற்சட்டைத்துணி என்ற அடிப்படையில் இலவச சீருடைத்துணி பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.***

# சிறுவர் துஷ்பிரயோகங்கள் மோசமாக அதிகரிப்பு

## இந்த வருடம் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள்: அதிகாரிகள் தெரிவிப்பு

இந்த வருடம் நாட்டில் இடம்பெற்றுள்ள சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக, இது வரை 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றி அறிவிப்பதற்காக, அறிமுகப்படுத்தப் பட்டுள்ள விசேட தொலைபேசி சேவையூடாகவே, அநேகமான முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி; பெற்றோர், பாதுகாவலர்கள், அறிமுகமானவர்கள் ஆகியோரினாலேயே அதிகளவு சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப் பட்டிருப்பதாக, இந்த முறைப்பாடுகளினூடாகத் தெரியவந்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

60 Day's BASIC / SPOKEN ENGLISH - தபால் மூல ஆங்கில பாடநெறி

இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி E.L.I யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்

7 வயது தொடக்கம் பெரியோர் வரை அனைவருக்கும் என விசேடமாக தயாரிக்கப்பட்ட BASIC / SPOKEN ENGLISH தபால் மூல பாடநெறி

அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத,வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.



பாடநெறியை தொடரும் உங்களுக்கு
அழகிய T.SHIRT ஒன்று PHONE SIM CARD மற்றும்
30 DAY'S EASY WAY ENGLISH புத்தகம் ஒன்று என்பன
இலவசமாக வழங்கப்படும்



எமது BASIC/SPOKEN / DIPLOMA IN ENGLISH சான்றிதழானது வேலை வாய்ப்பு பெற மற்றும் வெளிநாட்டு தூதரகங்களுக்கு (Embassy ) களுக்கு செல்லுடியாகும் இதனால் உங்கள் வெளிநாட்டு பயணங்களுக்கும் VISA பெறவும் இது துணையாக அமையும்.

மேலதிக விபரங்களை பெற பெயர்,முகவரியை தெளிவாக 0777-220002 க்கு SmS செய்யுங்கள்

இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்

THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

# பாடசாலை நேர அதிகரிப்பு...

*(முன்பக்கத் தொடர்ச்சி...)*

இயந்திரமயமான நாட்களைத்தான் கடத்தி வருகின்றனர். ஓடி, ஆடி விளையாடுவதற்கென அவர்களுக்கிருந்த நேரமும் கூட இன்று பெரியவர்களால் கபளீகரம் செய்யப்பட்டுள்ளன. பாடசாலை விட்டு வீடு வந்தாலும் கூட, அவர்களுக்கு உரிய ஓய்வு கிடைப்பதில்லை. மாறாக, டியூஷன், இதர பயிற்சி வகுப்புகள் என அலைவதிலேயே அவர்களின் பிள்ளைப் பருவம் வீணடிக்கப்படுகின்றது. தமது பெற்றோர், சகோதரர்களுடன் பொழுதைக் களிப்பதற்குக்கூட, அவர்களுக்கு உரிய நேரம் கிடைப்பதில்லை. இத்தகைய ஒரு பின்னணியில் பாடசாலை நேரம் மேலும் நீடிக்கப்பட்டால் இந்த பிள்ளைகளின் நிலைமை மேலும், பரிதாபகரமானதாகவே அமைந்துவிடும். அத்துடன், மாணவர்கள் தமது பகல் உணவையும் பாடசாலையிலேயே உண்ண வேண்டிய நிலை ஏற்படும். இவ்வாறு பாடசாலையில் பகலுணவை உண்பதானது, தமது வீட்டிலிருந்து உண்பதைப் போன்ற திருப்தியை அவர்களுக்கு ஏற்படுத்துவதில்லை என்பதை பிள்ளைப் பருவத்தின் மனநிலையில் இருந்து பார்க்கும் எவரும் உணர முடியும்.

இவ்வாறே, இன்று ஏராளமான மாணவர்கள் பாடசாலைக்கு பாடசாலை வேன்களிலேயே வந்து செல்கின்றனர். இவ்வாறு பாடசாலைக்கு வந்து செல்லும் பல பிள்ளைகள் மாலை நேரமாகிய பின்னர்தான் வீடு செல்கின்றனர். இந்த நிலையில் நேரம் நீடிக்கப்படுமாக இருந்தால் மேலும் தாமதித்து இருள் சூழ்ந்த பின்னர்தான் வீடு செல்லும் நிலை காணப்படும். இத்தகைய நிலையில், வகுப்பாசிரியரால் கொடுக்கப்படும் வீட்டு வேலைகளை பிள்ளைகள் எத்தனை மணிக்கு செய்வது? ஓய்வே இல்லாத நிலைக்கு அவர்கள் தள்ளப்படுவது எந்தவகையில் நியாயமானது?

மென்மையான உள்ளம் படைத்த இந்த மாணவர்கள்மீது இவ்வாறான திணிப்புக்களை மேற்கொள்வதானது, சமுதாயத்தின் மீது அவர்களுக்கு ஒரு வெறுப்புணர்வையே ஏற்படுத்தும். அதுவே நாளடைவில் அவர்களை கொடூர மானவர்களாக மாற்றிவிடக்கூடும். இதுவே உளவியல் நிபுணர்களினது கருத்துமாகும். அண்மைக்காலமாக, ஒரு சில பாடசாலைகளில் நடைபெறுகின்ற பலவிதமான நடத்தை துஷ்பிரயோகங்களை கேள்விப்படுகின்றோம். இத்தகைய நிலையில் மாலை நேரம் வரை பாடசாலை நேரம் நீடிக்கப்படுமாயின் இந்த துஷ்பிரயோகங்கள் நடைபெறாமல் அவர்களை பாதுகாத்தல், கண்காணித்தல் போன்றவற்றை மேற்கொள்வது எந்தளவிற்கு சாத்தியப்படும் என்ற கேள்வியும் இங்கு எழுகின்றது.

பாடசாலை ஆசிரியர்களுக்குக்கூட, இந்த நேர அதிகரிப்பானது நடைமுறை சிக்கல்களை ஏற்படுத்தக்கூடியது. அவர்களுக்கென்றொரு குடும்பம் உண்டு. அவர்களுக்கென்று பிள்ளைகள் உள்ளனர். நேர அதிகரிப்பால் அவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகும்போது, மறுநாள் அதன் தாக்கத்தை மாணவர்கள்தான் அனுபவிக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம். இதில், ஏனைய அரசாங்க, தனியார் ஊழியர்களுடன் ஆசிரியர்களை ஒப்பிட்டுப் பார்த்தல் நல்லதல்ல. ஏனெனில்; வகுப்பில் முப்பதிற்கும் மேற்பட்ட மாணவர்களை தினமும் கட்டி ஆள்வதென்பது லேசுபட்ட காரியமல்ல.

எனவே, பாடசாலை அதிபர்கள்தான் இது விடயத்தில் தமது நேர்மையை வெளிப்படுத்த வேண்டும். நாட்டில் அமைச்சர்கள் வருவார்கள் போவார்கள், புதுப்புது திட்டங்கள் வரும் போகும். ஆனால், அதனால் ஏற்படும் பாதிப்புக்களோ நிரந்தரமான பேரழிவை ஏற்படுத்திவிடும். ஆகவே, கல்வி அமைச்சரின் இந்த தீர்மானத்தையிட்டு பாடசாலை அதிபர்கள் முதலில் தமது அதிருப்தியை வெளிப்படையாக காட்டுதல் வேண்டும்.

மாணவ உள்ளங்களை கருணை உணர்வோடு, பாச உணர்வோடு பார்ப்பதற்கு அதிபர்கள் முயற்சிக்க வேண்டும். மாறாக, தமது இருப்பை அடையாளப் படுத்துவதற்காகவோ, தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவோ அல்லது மேலிடங்களை சந்தோஷப்படுத்துவதற்காகவோ நேர அதிகரிப்பை அதிபர்கள் வரவேற்பார்களேயானால் வளரும் மொட்டுக்களை கருகச் செய்த பழிபாவம் அவர்களையும் சார்ந்துவிடும். அவ்வாறே, எதிர்கால தலைமுறையின் உளவியல் தாக்கங்களுக்கு அவர்களும் பங்காளிகளாகி விடுவர். அதிபர்களுக்கு மட்டுமன்றி அரச உயர்மட்டத்திலுள்ள கல்விசார் அதிகாரிகளுக்கும் இது பொருந்தும்.

மாணவப் பருவத்தினர்மீது இவ்வாறு நேர அதிகரிப்புத் திணிப்பை மேற்கொள்ள எத்தனிப்பதானது, பல்கலைக்கழக மட்டத்திலிருந்த 'ராக்கிங்'கை (Ragging) பாடசாலையில் நடைமுறைப்படுத்துவது போல் ஆகிவிடும். ஆகவே, கல்வி அமைச்சரே! அதிபர்களே! மாணவ சமூகத்திற்கென்று சிறிதளவேனும் ஓர் ஓய்வு நேரத்தைக் கொடுங்கள். அவர்களை அவர்களது உலகிலும் வாழவிடுங்கள். மாறாக, அவர்களை வஞ்சிக்கும் விதமாக நடத்தாதீர்கள். பொன்னான அவர்களின் காலநேரத்தை சூறையாடி, அவர்களின் எதிர்காலத்தை சூன்யமாக்கிவிடாதீர்கள். அது நாட்டுக்கும் கேடு; உலகிற்கும் கேடு ஆகும். இனிமேலாவது, நிந்திக்காமல் சிந்திப்போம்.

நன்றி
இப்படிக்கு அன்புடன்
ஆசிரியர்
**வி.ரெட்லி ஹெரிசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாடசாலைக் கல்வியைக் கற்றுக்கொண்டிருக்கும்போதோ அல்லது அதனை முடித்த பின்னரோ நேர்முகத் தேர்வுகளில் (Interview) பங்குகொள்ளும் சந்தர்ப்பங்கள் பல உருவாகின்றன. நேர்முகத் தேர்வு என்பது, நம் திறமைகளையும் அறிவையும் சுருக்கமாக முதன்மைப்படுத்தும் இடமாகும். அதில் நாம் பங்குகொள்ளும் சிறு நேரம்தான் எமது எதிர்காலத்தையே தீர்மானிக்கின்றது*

# நேர்முகத் தேர்வுகளில் வெற்றி பெறல்







## நேர்முகத் தேர்வுகளுக்குச் செல்லும்போது....

நேர்முகத் தேர்வுக்கு செல்வதற்கு முன், நேர்முகத் தேர்வொன்றில் பங்குபற்றிய ஒருவரிடம் அதனைப் பற்றிக் கேட்டு அறிந்துகொள்ளுங்கள். நேர்முகத் தேர்வுகளில் பொதுவாக, குறிப்பிட்ட சில வினாக்களையே கேட்பார்கள். எனவே, ஏற்கனவே நேர்முகத் தேர்வுகளில் கலந்துகொண்ட ஒருவரிடம் அவற்றை கேட்டு அறிந்துகொள்வதானது, இலகுவாக விடையளிப்பதற்கும் எம்மைத் தயார்படுத்திக்கொள்ளவும் வசதியாக இருக்கும்.

நீங்கள் நேர்முகத் தேர்விற்குச் செல்லும் முன், போகும் இடத்தைப் பற்றி நன்கு அறிந்துகொள்ள வேண்டும். அதாவது, முன்கூட்டியே அதனைப் பற்றிய விளக்கத்தை, இருக்கும் இடத்தை அறிந்துகொண்டால் நேரகாலத்தோடும் இலகுவாகவும் உரிய இடத்தை நாம் சென்றடையலாம். நேர்முகத் தேர்வு நடைபெற இருக்கும் இடத்திற்கும் நாம் புறப்படும் இடத்திற்கும் பயணிக்கும் நேரத்தை சரியாகக் கணிப்பிட்டு தேர்வு நடைபெறவுள்ள நேரத்திற்கு 15 நிமிடங்களுக்கு முன்னரே, அவ்விடத்தை அடையக்கூடியவாறு ஆயத்தங்களைச் செய்துகொள்ள வேண்டும்.

நேர்முகத் தேர்வுக்கு செல்லும்முன், அத்தேர்விற்குத் தேவையான பிறப்புப்பதிவு, சுய விபரக்கோவை, கல்விச் சான்றிதழ்கள் போன்ற ஆவணங்களை தவறாது எடுத்துச்செல்லுங்கள். நீங்கள் தேர்வு நடக்கும் இடத்திற்குச் செல்லும்முன், உங்களது கையடக்கத் தொலைபேசியை கட்டாயம் நிறுத்திவிட்டு செல்ல வேண்டும்.

நேர்முகத் தேர்வுக்குச் செல்ல அணியும் உடையானது, கவர்ச்சி இல்லாமல், சுத்தமாகவும் நேர்த்தியாகவும் பொருத்தமானதாகவும் அமைய வேண்டும். தேர்வு நடைபெறும் இடத்திற்கு அவர்களது அனுமதியைப் பெற்றுச் செல்ல வேண்டும். நீங்கள் செல்லும்போதும் திரும்பி வரும்போதும் மரியாதையுடனும் பண்புடனும் செயற்பட வேண்டும். உங்களது ஒவ்வொரு செயற்பாட்டையும் அவர்கள் தவறாது குறித்துக்கொள்வர் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

## நேர்முகத் தேர்வு நடைபெறும்போது....

நேர்முகத் தேர்வில் அங்கிருக்கும் அதிகாரிகளுடன் பேசும்போது, பயம் இன்றி, பதற்றம் இன்றி நம்பிக்கையுடன் பேச வேண்டும். அப்பொழுதுதான் நீங்கள் சிறந்த ஆளுமை உள்ள நபராகக் கணிக்கப்படுவீர்கள். தேர்வு நடைபெறும் நேரத்தில் அளவுக்கதிகமான வினாக்களைக் கேட்டு அவர்களது வெறுப்புக்கு நீங்கள் உள்ளாகக் கூடாது. இதனால், நேரமும் வீணடிக்கப்படும்.

தேர்வை நடாத்தும் அதிகாரிகளிடம் பேசும்போது, குறிப்பிட்ட தொழிலில் நீங்கள் அதிக விருப்பம் கொண்டிருப்பதைப் போல் பேசுங்கள். ஆனால், அதற்காக, கெஞ்சிக் கேட்பதாக இருக்கக்கூடாது.

தற்பெருமை, புகழ் பாடல் என்பன கூடாது. தேர்வு நடாத்தும் அதிகாரிகள் கேட்கும் வினாக்களுக்கு உற்சாகத்துடன் சுருக்கமாகவும் தெளிவாகவும் அவர்களது முகத்தைப் பார்த்து விடையளியுங்கள். அத்துடன், பொய் சொல்வதை முற்றாகத் தவிர்த்துவிடுங்கள். மென்மையாகவும் சாதுர்யமாகவும் அறிவுபூர்வமாகவும் பேச வேண்டும். நீங்கள் நடக்கும்போதும் அமரும்போதும் இருக்கையை விட்டு எழும்பும்போதும் அலுப்புடன் சோம்பலாக செயற்படாமல் உற்சாகத்தோடு நடந்துகொள்ள வேண்டும்.

ஆகவே, நேர்முகத் தேர்வுகளில் பங்குகொள்ளும்போது, மிகச் சிறப்பாக செயற்பட வேண்டும். இது மிகவும் முக்கியமான விடயமாகும். பாடசாலை மாணவர்களாகிய நீங்கள், இப்பொழுதிலிருந்தே, இவ்வாறான திறன்களை வளர்த்துக்கொள்வதானது, வாழ்க்கையில் என்றைக்கும் பயனளிக்கும்.

(தொடரும்)

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

# 2011, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவி க.கௌதினி, 164 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கமலநாதன்-நாகேஸ்வரி தம்பதியரின் புதல்வியாவார்.



கி.ஜெனுசன், 151 புள்ளிகளைப் பெற்றுள்ளார். மன்/பொன்தீவு கண்டல் றோ.க.த.க.பாடசாலை மாணவனான இவர், கிறிஸ்ரி அன்ரன்-சகிலா தம்பதியரின் புதல்வராவார்.



எம்.ஜே.அஸ்மா, 157 புள்ளிகளைப் பெற்றுள்ளார். கிந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலையில் கல்வி கற்கும் இவர், ஜெமீல்-உம்மு ஸபிய்யா தம்பதியரின் புதல்வியாவார்.



எஃப்.ஸம்ஹா, 157 புள்ளிகளைப் பெற்றுள்ளார். களு/அல்- பாஹியதுல் நஸ்ரியா மு.பா.ம.வித்தியாலய மாணவியான இவர், முயீஸ்-பரீஸா தம்பதியரின் புதல்வியாவார்.



தெஹிகம அல்-இல்மா முஸ்லிம் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எம்.ஆதீப், 171 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், முஜிபுர் ரஹ்மான்-ரிஸானா தம்பதியரின் புதல்வராவார்.



தல்துவ பௌத்த ம.வித்தியாலய மாணவன் எம்.ஃபதானி, 168 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், பஸ்லின்-ஸில்மியா தம்பதியரின் புதல்வராவார்.



கோ.கோமைந்தன், 160 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய மாணவராவார்.



ப/நாயபெத்த இல.01 தமிழ் வித்தியாலய மாணவன், மோ.ரொபின்சன், 156 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் சி.ரிஷிகேதன், 157 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



மது/விவேகானந்தா தமிழ் வித்தியாலயத்தில் சித்தியடைந்த எம்.தனுசன் (169 புள்ளிகள்), சி.ஆசாத் சர்மா (161 புள்ளிகள்) ஆகியோர் தமது வகுப்பாசிரியருடன் காணப்படுகின்றனர்.



தி/வெள்ளைமணல் அல்-அஸ்ஹர் மு.ம.வித்தியாலய மாணவன் எம்.ஹிஸ்வி, 156 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



கிந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலை மாணவன் எம்.அஹ்ஸன், 174 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அலீம்-இஸ்மத் பாத்திமா தம்பதியரின் புதல்வராவார்.



ரா.ஜிந்திசன், 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய மாணவராவார்.



எம்.ஆர்.முன்ஸிபா, 154 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், தி/வெள்ளைமணல் அல்-அஸ்ஹர் மு.ம.வித்தியாலய மாணவியாவார்.



கிந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலை மாணவி எஃப். ரிஸ்லா, 159 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நிஸாம்தீன்-ஸாஹிலா தம்பதியரின் புதல்வியாவார்.



குருகுத்தலை முஸ்லிம் ம.வித்தியாலயத்தில் கல்வி பயிலும் எஃப்.இன்சிரா, 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அப்துல் முத்தலிப்-ரிபாய்னா தம்பதியரின் புதல்வியாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தாட்டிக்காவில் ராட்சதப் பனிப்பாறை






பனிப்பிரதேசமான அந்தாட்டிக்காவில் ராட்சதப் பனிப்பாறையொன்று உருவாகி வருகின்றது. இது பைன் தீவிற்கு அருகே 880 சதுர கிலோமீற்றர் சுற்றளவிற்கு பரவியுள்ளதாக அண்மையில் கண்டறியப்பட்டுள்ளது. இந்த பனிப்பாறையானது, இந்த வருடத்தின் இறுதியில் அல்லது அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் முழுமையாக வளர்ச்சி அடையும் என இது குறித்த மேலதிக ஆராய்வுகளில் ஈடுபடும் அமெரிக்காவின் நாஸா விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இந்த ராட்சதப் பனிப்பாறையானது, முழுமையாக வளர்ச்சியடையும்பட்சத்தில் அது ஜேர்மனியின் தலைநகரம் பேர்லின் அளவிற்குப் பெரிதாக உருவாகலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.



## சிந்தனைக்கு சில வரிகள்

✱ கீழ்த்தரமான தந்திரங்களினால், இந்த உலகில் மகத்தான காரியம் எதையும் சாதித்து விட முடியாது.

-சுவாமி விவேகானந்தர்

✱ ஒவ்வொரு நிமிடத்தையும் நல்ல பண்புடன் வாழ வேண்டும் என அக்கறைகொண்டால் போதும். இவ்வுலகில் ஒவ்வொரு நிமிடத்தையும் மகிழ்ச்சியுடன் வாழலாம்.


-ஃப்ராங்க்ளின்

✱ எப்போதும் மனம் மிகவும் தூய்மையாக இருக்க வேண்டும். அப்போதுதான் முகம் புத்துணர்ச்சியுடன் இருக்கும்.

-மொர்சன்

# கண்ணாடி எவ்வாறு தயாரிக்கப்படுகின்றது?

நமது அன்றாட வாழ்வில் நம் அனைவருக்கும் கண்ணாடியின் தேவையானது மிகவும் அவசியமானது. இக்கண்ணாடி வாகனங்கள்-ஜன்னல்கள், ஆய்வகங்கள் மற்றும் பல விடயங்களில் பெரும் பங்களிப்பை செலுத்துகின்றது. இவ்வாறான



கண்ணாடிகளைத் தயாரிப்பதற்கு குறிப்பிட்ட ஒரு வகையான மணல் பயன்படுகின்றது. இதனை 1,700 டிகிரி செல்சியஸ் அதாவது, 3,090 டிகிரி பரன்ஹைட் வெப்பத்தில் உருக்கி, இதனுடன் சோடா எனப்படும் சோடியம் காபனேட் மற்றும் நீர் கலவாதிருக்க கல்சியம் காபனேட்டும் சேர்க்கப்படுகின்றது. இந்தக் கலவையுடன் பழைய கண்ணாடித் துண்டுகளும் சேர்த்து தயாரிக்கப்படுகின்றது.

இக்கண்ணாடியை தேவையான வடிவங்களில் தயாரிக்கலாம். இவை



தூசுகளாலும் ரசாயனப் பொருட்களாலும் பாதிப்படைவதில்லை. போரோன் ஒக்சைட் கலந்து தயாரிக்கப்படும் கண்ணாடிகள் வெப்பத்தை நன்கு தாங்கும் ஆற்றல் பெற்றவை. சிவப்பு நிறக் கண்ணாடிகள் தயாரிக்க செலேனியம் சல்பைட்டும் நீல நிறக் கண்ணாடிகளுக்கு கொப்பர்



ஒக்சைட்டும் பால் வண்ணக் கண்ணாடிகளுக்கு பொஸ்பேட்டும் பயன்படுத்தப்படுகின்றது.


NOTHING IS IMPOSSIBLE

# KALAIMAGAL International College

இலங்கை கல்வித்துறையில் சிறந்த பெறுபேறுகளை ஈட்டிக்கொள்ளும் மாணவர்கள் செறிந்து வாழும் வடபகுதியில் சர்வதேச மொழியான ஆங்கில மொழி மூல சர்வதேச பாடசாலை.

- இலங்கை கல்வித் திணைக்களம், இலங்கைபரீட்சைத் திணைக்களம் ஆகியவற்றில் உரிய முறையில் பதிவுசெய்யப்பட்ட முழு நேர தனியார் பாடசாலை .(English medium)
- Play group முதல் Grade-05 வரை Oxford பாடத் திட்டமும் Grade-6 முதல் G.C.E (A/L) வரை இலங்கை பாடத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்படும்
- தமிழ், சமயம் ஆகிய பாடங்கள் தமிழ்மொழிமூலமும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கில மொழிமூலமும் சிங்களம் விருப்பத்துக்குரிய பாடமாகவும் காணப்படும
- அரச பாடசாலைகளின் நேரசூசியும் பின்பற்றப்படும் ➢ கலை, கலாசாரம், விளையாட்டு, நிகழ்வுகளை கல்விசார் செயற்பாடாக உள்வாங்கும் அமைப்பு.
- மாணவர்களின் திறன்களை வெளிக்கொணரும் வருடாந்த பரிசளிப்பு விழா, கலைவிழா என்பன உள்வாங்கப்பட்ட அமைப்பு.
- நூலகம்
- பிரத்தியேக சீருடை
- கணணி ஆய்வுகூடம்
- விஞ்ஞான ஆய்வுகூடம்
- மிகக்குறைந்த கட்டண வசதி
- சிறார்களுக்கான சிறுவர் பூங்கா
- சர்வதேச தரம் வாய்ந்த வகுப்பறை வடிவமைப்பு
- ஆங்கில மொழிமூலம் பயிற்றப்பட்ட தரம் வாய்ந்த ஆசிரியர் குழாம்

இன்னும் பல அரிய செயற்பாடுகளுடன் இயங்கும் எமது கல்லூரியின் பிரதான கிளைகள் சாவகச்சேரி, கொக்குவில், நெல்லியடி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டும் கிளைகளில் மட்டும் முன்பள்ளி முதல் க.பொ.த (உ/த) வரையிலான வகுப்புகள் உள்வாங்கப்பட்டும் உள்ளன.ஏனைய அச்சுவேலி, மானிப்பாய், பருத்தித்துறை கொடிகாமம், நல்லூர் கிளைகளில் play Group L.K.G, U.K.G போன்ற வகுப்புகள் மட்டுமே ஆரம்பிக்கப்பட உள்ளன. இக்கிளைகளில் இணைந்து கொள்ளும் சிறார்கள் தமது மேல் வகுப்புகளுக்கு கிட்டிய பிராதன கிளைகளில் ஒன்றில் இணைந்து கற்கக்கூடிய வகையில் எமது வட மாகாண செயற்திட்டம் காணப்படுகிறது.

The Director:
**Kalaimagal International College**
Church Lane, K.K.S Road. Kokuvil
T.P: 021 4923238, 077 4904286, 077 8834592

**Chavakachcheri:**
Nunavil East, Kandy Road,
Chavakachcheri

**Uduppidy:**
Thula veethy,Imayan West,
Uduppidy

**Velanai:**
Amman Veethy, Velanai West,
Velanai-8

**Galaha:**
72, Pupurassa Road,
Galaha,Kandy


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையானது, நெடுங்காலந்தொட்டே வெளிநாட்டவர்கள் மத்தியில் கிழக்காசியாவின் 'தானியக் களஞ்சியம்' என பிரபல்யம் பெற்றிருந்தது. மல்வத்து ஓயா, மாதுரு ஓயா ஆகிய நதிகளின் உதவியுடன் சிறந்த நீர்ப்பாசன வசதியைப் பெற்று, விவசாயம் செழித்திருந்தமையாலேயே, இவ்வாறு பிரபல்யம் பெற்றதாக வரலாற்றுக் குறிப்புக்கள் கூறுகின்றன. பண்டையகால மன்னர்கள் பலரும் மகாவலி கங்கையை ரஜரட்டைக்கு திசை திருப்புவதற்கு அரும்பாடுபட்டுள்ளனர். இலங்கையின் சிதைவடைந்திருந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் மகாவலி கங்கை பெரும் பங்கு வகிக்கின்றது

# இலங்கையி மகாவலி க



## மகாவலி கங்கை

இலங்கையின் மிக நீளமான நதி மகாவலி கங்கையாகும். இது 335 கி.மீ நீளமும் இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 1/6 பங்கையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இந்த மகாவலி கங்கை தபகந்தலாவ அல்லது ஹோட்டன் சமவெளிப் பரப்பிலேயே ஊற்றெடுக்கின்றது. இதன் பிரதான நதியாக கொத்மலை ஓயாவின் முகப்பு இருப்பதாகவும் இதன் நீளம் 10,327 மீற்றர் எனவும் கூறப்படுகின்றது. இலங்கையில் ஆகக் கூடுதலான நீளத்தைக் கொண்டுள்ள நதிமூலம் மகாவலி கங்கையாகும்.

## மகாவலி கங்கையின் ஓடு பாதை


மத்திய மலைநாட்டில் இருந்து ஊற்றெடுத்துப் பாயும் மகாவலி கங்கையிலிருந்து பல கிளை ஆறுகளும் உருவாகி உள்ளன. விக்டோரியா நீர்வீழ்ச்சிக்கு அடுத்ததாக, மேற்கு நோக்கிப் பாய்ந்து; உமா ஓயா, பதுலு ஓயா, லுணுகல மற்றும் லொக்கல ஓயா ஆகியவற்றுடன் இணைகின்றது. வடக்கு நோக்கிப் பாயும்போது, அம்பன் கங்கையுடன் கலக்கின்றது. இதற்கிடையில் ஹசலகல மற்றும் ஹீன் ஓயா ஆகிய ஆறுகள் இதனுடன் இணைகின்றன. பரந்தளவில் நீரை உள்ளீர்த்துக்கொண்ட நிலையில் பாயும் இந்த நதியானது, சமவெளிகள் ஊடாகப் பாயும்போது, பெரிய ஆறு, கந்தகாரு ஆறு, வெருகல் ஆறு ஆகிய ஆறுகளுக்கும் கிளை நதிகளுக்கும் பல கூறுகளாகப் பிரிந்தும் செல்கின்றது. அத்துடன், கொட்டியாரக்குடா வரை பாய்ந்து மூதூருக்கு அண்மித்த பிரதேசத்தில் கடலுடன் கலக்கின்றது. இதன் இரண்டாவது கழிமுகம் வெருகல் கிராமத்திற்கு அருகில் கடலுடன் சங்கமிக்கின்றது.

## மகாவலியின் வரலாறு

மின்விலவில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டானது, மகாவலி கங்கையைப் பற்றிக் குறிப்பிடும் மிகப் பழமைவாய்ந்த கல்வெட்டாகும். கி.மு. முதலாம் நூற்றாண்டளவில் குடகன்ன திஸ்ஸ என்ற அரசன் மின்வில பிரதேசத்தில் மகாவலி கங்கையை திசை திருப்பும் வகையில் குறுக்காக ஓர் அணைக்கட்டை நிர்மாணித்ததாக அந்த கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றது.

கி.பி.571-604 காலப்பகுதியில் முதலாவது அக்கபோதி மன்னன் மினிப்பே அணைக்கட்டு மற்றும் கால்வாய்களை வெட்டியதாகவும் தற்போது மீதமாகவுள்ள ஒரு முக்கிய சான்றாக இது இருப்பதாகவும் கருதப்படுகின்றது. இரண்டாவது சேன மன்னன் அக்கால்வாயை பெருப்பித்ததாகவும் வரலாற்று மூலாதாரங்களில் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

13 ஆம் நூற்றாண்டுக்குரியதாக கருதப்படும் மினிப்பே கல்வெட்டில் 'மகாவலி என்ற அழகி, பூமித்தாயை செழுமைப்படுத்த வந்துதித்த அழகிய மலர்செண்டு' என குறிப்பிடப்பட்டுள்ளது. மகாவலி கங்கையின் கிளை ஆறான அம்பன் கங்கைக்குக் குறுக்காக அணைகட்டப்பட்டு, மின்னேரியாக் குளத்திற்கு நீர்ப்பாய்ச்சப்பட்டதாகவும் குறிப்புக்களில் காணப்படுகின்றன. மகாசேன மன்னன் பூதங்களை ஏவியே மினிஹிரி குளத்தை நிர்மாணித்ததாகவும் அந்த நேரத்திற்கு கார கங்கை ஊடாக நீரைப்பாய்ச்சும் வகையில் ஓர் அணையை நிர்மாணித்ததாகவும் குறிப்புக்களில் அடங்கியுள்ளது.



## மகாவலி கங்கைத்திட்டம்

மகாவலி கங்கையின் நீரைப்பாய்ச்சி, வறண்ட பிரதேசங்களில் செழிப்பை ஏற்படுத்தி, இரு போகங்களிலும் நெற்செய்கையை மேற்கொள்வது 'மகாவலி கங்கை திசை திருப்பு' திட்டத்தின் பிரதான நோக்கமாக இருந்தது. அத்துடன், 540 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய நீர்மின் உற்பத்தி செய்யும் திட்டம் இதன் இரண்டாவது நோக்கமாகும். இந்த மகாவலி திசை திருப்பு திட்டத்தின் அனைத்து நோக்கங்களையும் 30 வருடங்களில் பூர்த்தி செய்வது உத்தேசிக்கப்பட்ட வரையறையாக இருந்தது.

## துரிதப்படுத்தப்பட்ட மகாவலி திசை திருப்புத் திட்டம்

இந்த 30 வருடத் திட்டத்தை துரிதப்படுத்தும் வகையில் அதனை 5 வருடங்களில் பூர்த்தி செய்யும் விதமாக மாற்றம் செய்யப்பட்டு, அதற்கான நடவடிக்கைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டன. அதன்படி, கொத்மலை, விக்டோரியா, ரந்தெனிகல, மாதுரு ஓயா ஆகிய திட்டங்கள் இந்த துரிதப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் பூர்த்தி செய்யப்பட்டன. பின்னர் இத்திட்டத்துடன், ரன்தெம்பேயும் இணைத்துக்கொள்ளப்பட்டது.

## நீர்மின்

மகாவலி கங்கை திசை திருப்பு திட்டத்தின் குறிக்கோள்களில் பிரதானமானது. நீர் மின்சார உற்பத்தியை அதிகரிப்பதாகும். இதற்கமைய, கொத்மலை, விக்டோரியா, ரந்தெனிகலை, ரந்தெம்பே, உக்குவலை, போவதென்ன ஆகிய இடங்களில் நீர்மின் உற்பத்தி நிலையங்களை நிறுவி மின்சார உற்பத்தியை ஆரம்பிப்பது பிரதான நோக்கமாகக் காணப்பட்டது.

## விவசாயம்

மகாவலி நதிக்கு அண்மையில் வாழ்ந்த மக்களின் பிரதான தொழிலாக அமைந்தது விவசாயமாகும். இதில் நெல் உற்பத்திக்கு முக்கிய இடம் வழங்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, உபஉணவு உற்பத்திப் பயிர்களும் பயிரிடப்பட்டன. அத்துடன், கால்நடை வளர்ப்பும் பிரதான இடத்தை வகித்தது. இத்திட்டத்தின்கீழ் 'மகாவலி குடியேற்றப் பிரதேசங்கள் 13' என அடையாளப்படுத்தப்பட்டு, அவ்விடங்களில் மக்களும் குடியமர்த்தப்பட்டனர். குடியமர்த்தப்பட்ட குடும்பங்களுக்கு தலா ஒரு குடும்பத்திற்கு வயல் காணி $2^{1/2}$ ஏக்கரும் பயிர் நிலம் $1^{1/2}$ ஏக்கருமாக காணிகள் வழங்கப்பட்டன. இந்த குடியேற்றத்திட்டம் 1976 ஆம் ஆண்டு மகாவலி H பிரிவில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ின் மிக நீளமான ங்கை

## காவலி ங்கையிலிருந்து ற்றெடுக்கும் த்தேக்கங்கள்



### ரந்தெனிகலை நீர்த்தேக்கம்



அணையின் நீளம்: 485 மீற்றர்.
அணையின் உயரம்: 102 மீற்றர்.
நீர்த்தேக்கத்திலுள்ள நீரின் கொள்ளளவு: 860 மில்லியன் கனமீற்றர்.வான் கதவுகள்: 03.
மின் உற்பத்தி: 126 மெகாவோட்.

மகாவலி கங்கையின்கீழ் பகுதியை எல்லையாகக்கொண்டு தற்போது 'மினிப்பே' நீர்த்தேக்கம் என்று அடையாளப்படுத்தும் இடத்தில் இருந்து 6 மைல்கள்கீழ் நோக்கியதாக இந்த ரந்தெனிகலை அணை காணப்படுகின்றது. இது விக்டோரியா அணை வரை நீண்டு செல்கின்றது. விக்டோரியா நீர்த்தேக்கத்திற்கான நீரைக் கட்டுப்படுத்தி முகாமைத்துவம் செய்யும் வகையில் இந்த அணை அமைக்கப்பட்டிருக்கின்றது. இங்கு மின்சார உற்பத்திக்காகப் பாய்ச்சப்பட்ட நீர் பின்னர், மாதுரு ஓயாவுக்கும் உல்ஹிடிய நீர்த்தேக்கத்திற்கும் செல்கின்றது. இந்த ரந்தெனிகலை நீர்த்தேக்கம் மேற்கு ஜேர்மனியின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டதாகும்.

### மாதுரு ஓயா நீர்த்தேக்கம்



அணையில் நீளம்: 1,098 மீற்றர்கள்
உயரம்: 40 மீற்றர்.
நீர்மட்டம் 596.5 மில்லியன் கனமீற்றர்.
வான் கதவின் நீளம்: 150 மீற்றர்.

மாதுரு ஓயா கடலுடன் சங்கமிக்கும் இடத்தில் இருந்து 48 மைல் பின்னோக்கிய வகையில் குறுக்காக இந்த நீர்த்தேக்கம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இந்த நீர்த்தேக்க நிர்மாணத்தின்போது, அதிஉயர் நீர்ப்பாசன தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த நீர்த்தேக்கத்தின்மூலம் 1,24,736 ஏக்கர் நிலப்பரப்புக்கு நீர்ப்பாசன வசதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நீர்த்தேக்கத்தில் இருந்து விக்டோரியா, ரந்தெனிகலை நீர்த்தேக்கங்களுக்கும் நீர் பாய்ச்சப்படுவதோடு. இதனை அமைப்பதற்கு கெனடா அரசாங்கம் உதவி வழங்கியுள்ளது.

### போவதென்ன நீர்த்தேக்கம்



அணையின் நீளம்: 320 மீற்றர்.
உயரம்: 29.8 மீற்றர்.
நீர் கொள்ளளவு: 58.01 மில்லியன் கன மீற்றர்.
வான் கதவுகள்: 6.
சுரங்கக் கால்வாயின் நீளம்: 6.8 கி.மீற்றர்.
மின்சார உற்பத்தி: 40 மெகாவோட்.

உக்குவெல நீர்த்தேக்கத்தில் இருந்து அம்பன் கங்கைக்கு வரும் நீர் போவதென்ன நீர்த்தேக்கத்தில் சேமிக்கப்படுகின்றது. இந்த நீர்த்தேக்கத்தில் இருந்து உற்பத்தியாகும் மின்சாரம் ரஜரட்டை பகுதிக்கு வழங்கப்படுவதோடு, நீர்த்தேக்கம் 1,500 ஏக்கர் பரப்பளவையும் கொண்டுள்ளது. இங்கிருந்து வெளியேற்றப்படும் நீர் சுரங்கக் கால்வாய் ஊடாக, கலாஓயா அணை வரை கொண்டு செல்லப்படுகின்றது. இந்த நீர் கொங்ரீட் கால்வாய் ஊடாக, அனுப்பப்பட்டு நீர்வீழ்ச்சியாக இரண்டு பகுதிகளாகப் பிரிந்து தம்புள்ளை ஓயாவுக்கும் கலா ஓயாவுக்கும் நீரை வழங்குகின்றது.

### கொத்மலை நீர்த்தேக்கம்



அணைக்கட்டு நீளம்: 600 மீற்றர்.
அணையின் உயரம்: 87 மீற்றர்.
கொள்ளளவு: 174 கன மீற்றர் மில்லியன் நீர்.
வான் கதவுகள்: 3
சுரங்கக் கால்வாயின் நீளம்: 6.954 கிலோ மீற்றர்.
மின் உற்பத்தி: 201 மெகாவோட்.

மேட்டு நிலப்பரப்பில் இருந்து பாய்ந்து வரும் கொத்மலை ஓயா மகாவலி கங்கையின் உப நதிகளில் ஒன்றாகும். நீளமான அணை ஒன்றின்மூலம் நிர்மாணிக்கப்பட்ட இந்த நீர்த்தேக்கத்திற்கு மின் உற்பத்தி நிலையமும் உள்ளடங்கிக் காணப்படுகின்றது. இலங்கையில் உள்ள நிலக்கீழ் சுரங்க வழியில் அமைக்கப்பட்டுள்ள மின் உற்பத்தி நிலையம் இதுவாகும். மின் உற்பத்திக்காக பாய்ச்சப்படும் நீர் மீண்டும் மகாவலி கங்கைக்கு அனுப்பப்பட்டு பொல்கொல்லை அணைக்கு திசை திருப்பப்படுகின்றது. இந்த நீர்த்தேக்கம் சுவீடன் அரசாங்கத்தின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டிருப்பதோடு, மின் உற்பத்தி மற்றும் ரஜரட்டைப் பிரதேசத்திற்கு நீர் பாய்ச்சப்பட்டு அப்பிரதேசத்தை செழிப்படையச் செய்கின்றது.



### பொல்கொல்லை அணைக்கட்டு

அணையின் நீளம்: 146.3 மீற்றர்.
உயரம்: 18 மீற்றர்.
நீர்த்தேக்கத்தில் நீரின் கொள்ளளவு: 4.1 மில்லியன் கன மீற்றர்.
வான் கதவுகள்: 10
சுரங்கத்தின் நீளம்: 8.074 கி.மீற்றர்.
மின் உற்பத்தி: 40 மெகாவோட்.

கலா ஓயாவின் கொள்ளளவை விடவும் 12 மடங்கு பரப்பளவுடன் காணப்படுகின்றது.

வட மத்திய பிரதேசத்திற்கு இந்த நீர்த்தேக்கத்தினூடாக, நீர் கொண்டு செல்லப்பட்டு, அதன்மூலம் அப்பிரதேசத்தில் விவசாய அபிவிருத்திக்கு உத்வேகம் அளிக்கப்படுகின்றது. சுமார் இரண்டு லட்சம் ஏக்கர் வயல் நிலத்தில் நெல் உற்பத்திக்கு நீர்ப்பாசன வசதியளிக்கப்படுகின்றது. உக்குவெல, போவதென்ன, மொரகஹசந்த ஆகிய நீர்த்தேக்கங்களுக்கு மின் உற்பத்திக்காக, நீர் பாய்ச்சுதலும் இந்த பொல்கொல்லை நீர்த்தேக்கத்தினூடாகவே மேற்கொள்ளப்படுகின்றது.



### ரன்தெம்பே நீர்த்தேக்கம்

அணையின் நீளம்: 420 மீற்றர்.
உயரம்: 41.5 மீற்றர்.
நீரின் கொள்ளளவு மட்டம்: 11.5 மில்லியன் கன மீற்றர்.
வான் கதவுகள்: 4.
மின் உற்பத்தி: 51.8 மெகாவோட்.

ரந்தெனிகலை நீர்த்தேக்கத்தை அண்மித்ததாக, இந்த நீர்த்தேக்கம் அமைந்திருப்பதோடு, மின் உற்பத்திக்காக, நீரைப் பாய்ச்சுவதற்காகவும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ரன்தெம்பே அணை முழுமையாக கொங்ரீட்டால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.



### மினிப்பே அணைக்கட்டு மற்றும் நதி படுகைக் கால்வாய்

அணையின் நீளம்: 225.5 மீற்றர்.
உயரம்: 9 மீற்றர்.
கால்வாயின் நீளம்: 29.753 கி.மீற்றர்.
நீரின் ஓட்ட வேகம் செக்கனுக்கு: 1.4 மீற்றர்.
வெளியேற்றப்படும் நீரின் அளவு: செக்கனுக்கு 64 கன மீற்றர்.

நீர் உள்வருகை: ரன்கிந்தை நீர்த்தேக்கத்தில் இருந்து நீரைப் பெறுகின்றது.

உல்ஹிடிய ரன்கிந்தை நீர்த்தேக்கங்களில் இருந்து மகாவலி 'சி' பிரிவுக்குட்பட்ட 22,801 ஹெக்டேயர் பரப்பளவு நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி வழங்கப்படுகின்றது.



### உக்குவெல நீர்த்தேக்கம்

இந்த நீர்த்தேக்கம் பொல்கொல்லை அணைக்கு அண்மையாக அமைந்திருக்கின்றது. சுரங்கப்பாதை வழியாக, இந்த நீர்த்தேக்கத்திற்கு நீர் பாய்ச்சப்படுவதோடு, 40 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. மின்சார உற்பத்தியின் பின்னர் நீர் சுதுகங்கை மற்றும் அம்பன் கங்கைக்கு வெளியேற்றப்படுகின்றது.


### உல்ஹிட்டிய மற்றும் ரன்கிந்தை நீர்த்தேக்கங்கள்

மினிப்பே அணையில் இருந்து திசை திருப்பப்படும் நீர் தெற்குக் கரையோரமாக,



'யோத' கால்வாய் ஊடாக, உல்ஹிட்டிய நீர்த்தேக்கத்திற்கு நீர் பாய்ச்சப்படுகின்றது. இந்த நீர் உல்ஹிட்டியவில் சேமிக்கப்படுவதால், 50.000 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியளிக்கப் படுகின்றது. இந்த நீர்த்தேக்கம்மூலம் மாதுரு ஓயா போஷணை அடைகின்றது.

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்...)




### விக்டோரியா நீர்த்தேக்கம்

அணைக்கட்டின் நீளம்: 520 மீற்றர்.
உயரம்: 122 மீற்றர்.
நீரின் கொள்ளளவு: 722 மில்லியன் கன மீற்றர்.
வான் கதவுகள்: 8.
சுரங்கப் பாதையின் நீளம்: 5.646 கிலோ மீற்றர்.
மின்சார உற்பத்தி: 210 மெகாவோட்.

இலங்கையில் உள்ள மிக உயரமான அணையைக்கொண்ட நீர்த்தேக்கம் இதுவாகும். ஹூலுகங்கை மகாவலி கங்கையுடன் இணையும் கழிமுகத்திற்குக் கீழாக இந்த நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நீர்த்தேக்கத்தின் பரப்பளவு 730 சதுர மைல்கள் ஆகும். 1,12,000 ஏக்கர் வயல் நிலங்களுக்கு இந்த நீர்த்தேக்கத்தின்மூலம் நீர்ப்பாசன வசதியளிக்கப்படுகின்றது. பிரித்தானிய அரசாங்கத்தின் உதவியுடன் இந்த நீர்த்தேக்கம் நிர்மாணிக்கப்பட்டது. இதன்மூலம் வெளியேற்றப்படும் நீர் ரந்தெனிகலை நீர்த்தேக்கத்தில் சேர்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6-7ஆம் பக்கத் தொடர்ச்சி)




# இலங்கையின் மிக நீளமான மகாவலி கங்கை






அமீர் ஹுசைன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கயானா



சென். ஜோர்ஜ் அங்கிலிகன் தேவாலயம்

**அரசு:** ஒரு சட்ட சபையைக்கொண்ட பல கட்சிக் குடியரசு.

**சுதந்திரம்:** ஐக்கிய ராச்சியத்திடமிருந்து 1966 மே 26; குடியரசு பிரகடனம் 1970 பெப்ரவரி 23.

**தேசிய விடுமுறை தினம்:** குடியரசு தினமாகிய பெப்ரவரி 23.

**ஜனாதிபதி** (1999): பரத் ஜக்டியோ.

**பிரதமர்** (1999): சாமுவேல் ஹிந்த்ஸ்.

## புவியியல்

கயானா, தென் அமெரிக்காவின் வட கரையோரத்தில் அமைந்துள்ளது. கிழக்கில் வெனிசுவெலாவும் மேற்கில் சூரினாமும் வடக்கில் பிரேசிலும் எல்லைகளாக அமைந்துள்ளன. ஒடுக்கமான கரையோரப்பகுதி, மணற்பாங்கான மேட்டு நிலப்பகுதி, சவன்னா புல்வெளிகள், மழைக்காடுகள் மற்றும் உயர் நிலப்பகுதி என கயானாவை நான்கு பிரதான தரைத் தோற்ற வலயங்களாகப் பிரிக்கலாம். ஏராளமான நதிகள் இங்கு பாய்கின்றன. எஸெக்யூபோ, பேர்பிஸ், கோர்ன்டைன், குயுன், டிமேரரா என்பன அவற்றில் பிரதான நதிகளாகும்.

**மொத்தப்பரப்பு:** 83,000 ச.மைல் (214,970 ச.கி.மீற்றர்).

**மொத்த நிலப்பரப்பு:** 76,004 ச.மைல் (196,850 ச.கி.மீற்றர்).

**உயர் மலைச் சிகரம்:** ரோரைமா மலை- 2,835 மீற்றர்.

**தாழ்மையம்:** அட்லாண்டிக் சமுத்திரம்.

**நிலப்பிரிவுகள்:** 10 பிராந்தியங்கள்.

**மக்கள் தொகை** (2010): 748,486.

**தலைநகரமும் பெரிய நகரமும்:** ஜோர்ஜ்டவுன்.

**நாணயம்:** கயானா டொலர்.

**மொழிகள்:** ஆங்கிலம் (உத்தியோகபூர்வமொழி), அமெரிந்திய பேச்சு மொழி, கிரியோல், ஹிந்தி, உருது.

**இனக்குழுவினர்கள்:** கிழக்கு இந்தியர் 50%, கறுப்பர் 36%, அமெரிந்தியர் 7%; வெள்ளையர், சீனர், கலப்பின மக்கள் 7%.

**சமயங்கள்:** கிறிஸ்தவம் 50%, இந்து 35%, இஸ்லாம் 10%, ஏனையவை 5%.

**எழுத்தறிவு:** 99%.

**இணையத்தளக் குறியீடு:** .gy

**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** 592.

தேசிய இலச்சினை





தலைநகரின் ஒரு பகுதி



கயானா நாடாளுமன்றக் கட்டடத்தொகுதி



ஜனாதிபதி



பிரதமர்



த ஸ்டேட் ஹவுஸ் (ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம்)

**தேசிய கீதம்**

Dear land of Guyana, of rivers and plains;
Made rich by the sunshine, and lush by the rains,
Set gem-like and fair, between mountains and sea,
Your children salute you, dear land of the free… என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

முதன்முதலில் வர்ரோ இன மக்கள் இடம்பெயர்ந்து வந்து இங்கு குடியேறியுள்ளனர். 1600களில் ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரான்ஸியர் என மூன்று ஐரோப்பிய இனத்தவர்களாலும் இப் பிரதேசத்தில் குடியேற்றங்கள் உருவாக்கப் பட்டன. எனினும், 17ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஒல்லாந்த குடியேற்றவாசிகளே பெரும்பான்மையோராக இருந்துள்ளனர். நெப்போலியனின் யுத்த காலத்தில் பிரித்தானியா மற்றும் ஒல்லாந்த குடியேற்றங்களான பெர்பிஸ், டிமேரரா, எஸெக்யூபோ ஆகியவற்றை இணைத்து 1831 இல் 'பிரிட்டிஷ் கயானா' உருவானது.

1834 இல் இங்கு அடிமை வியாபாரம் ஒழிக் கப்பட்டது. அதன் பின் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டது.தோட் டங்களில் வேலை செய்வதற்காக பெருந்தொகையான தொழிலா ளர்கள் கிழக்கு இந்தியாவில் (ஆசியா), ஆபிரிக்காவி லிருந்து அழைத்து வரப்பட்டனர். 1966 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரமடைந்த கயானா, 1970 பெப்ரவரி 23 இல் குடியரசானது. இந்திய வம்சாவளியி னரான செட்டி ஜெகன் நாட்டின் முதலாவது பிரதமராகவும் ஜனாதிபதியா கவும் பதவி வகித்தார். தற்போதைய ஜனாதிபதி பரத் ஜக்டி யோவும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவராவார்.





## கலாசாரம்

இந்தியா, ஆபிரிக்கா, பிரான்ஸ், சீனா, பிரித்தானியா, ஒல்லாந்து, போர்த்துக்கல், கரீபியன், அமெரிக்கா, நேபாளம் ஆகிய நாடுகளின் கலாசார தாக்கங்களை கயானா கலாசாரம் பிரதிபலிக்கின்றது.

## காலநிலை

கயானா நாடானது, அதிக வெப்பத்தையும் அதிக மழைவீழ்ச்சியையும் இதமான காலநிலையையும் கொண்டுள்ளது. மே முதல் ஜூன் வரையும் நொவெம்பர் முதல் ஜனவரி வரையும் என இரண்டு மழைப் பருவங்கள் இங்கு நிலவுகின்றன.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்**(2005): பிரதான தொலைபேசி பாவனையாளர்கள்: 110,100; செல்லிடத் தொலைபேசி பாவனையாளர்கள்: 281,400, **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (1998): AM 3, FM 3, SW 1. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (1997): 3. **இணையத்தள வழங்குனர்கள்** (2007): 3,000; **இணையத்தள பாவனையாளர்கள்:** 160,000.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2001): மொத்தம் 187கி.மீற்றர். **பெருந்தெருக்கள்** (1999): மொத்தம் 7,970 கி.மீற்றர். **நீர்வழிப் போக்குவரத்து:** 1,077 கி.மீற்றர். **துறைமுகம்:** ஜோர்ஜ்டவுன். **விமான நிலையங்கள்** (2007): 93.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 2%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** கரும்பு, அரிசி, கோதுமை, மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி, கோழிப்பண்ணை, பாலுற்பத்திப் பொருட்கள், மீன். **கைத்தொழில்கள்:** சீனி, அரிசி ஆலை, புடவை, தங்கம் அகழ்வு, பொக்சைட் **இயற்கை வளங்கள்:** பொக்சைட், தங்கம், மீன். **ஏற்றுமதிகள்** (2009): சீனி, தங்கம், பொக்சைட், அரிசி. **இறக்குமதிகள்** (2009): இயந்திரங்கள், பெற்றோலியம், உணவுப் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்:** கெனடா, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய ராச்சியம், போர்த்துக்கல், நெதர்லாந்து, பெல்ஜியம், கியூபா.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

- கேய்ச்சர் நீர்வீழ்ச்சி
- சென்.ஜோர்ஜ் அங்கிலிகன் தேவாலயம்
- டிமேரரா ஹார்பர் பிரிட்ஜ்
- ஸ்டெப்ரோக் சந்தை
- கயானா தேசிய அருங்காட்சியகம்



கேய்ச்சர் நீர்வீழ்ச்சி



ரோரைமா மலை (கயானாவின் உயர் மலைச்சிகரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - 1 (கடந்த வாரத் தொடர்ச்சி)




பெயர்: ................................................ நேரம்: 45 நிமிடங்கள்

29) இலங்கையில் உள்ள ஆறுகள் பெருக்கெடுத்து ஓடுகின்றன. இதற்குக் காரணம்;

1. நீரை எவரும் தேவைகளுக்குப் பயன்படுத்தாமை.
2. நாடு முழுவதும் பெரும் மழை பெய்தமையால்.
3. பல கால்வாய்கள் வெட்டப்பட்டமையால்.

30) விளையாட்டுப் போட்டி ஒன்றில் மைதானத்தைச் சுற்றி சிவப்பு, நீலம், பச்சை, மஞ்சள் எனும் நிறக்கொடிகள் இதே ஒழுங்குமுறையில் நடப்பட்டுள்ளன. இதில், 45 ஆவது கொடியின் நிறம் என்ன?

1. நீலம் 2. பச்சை 3. சிவப்பு

★ *31 தொடக்கம் 33 வரையுள்ள ஒவ்வொரு வினாவும் பின்வரும் பந்தியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதனுடன் தொடர்புடையது. ஒவ்வொரு வெற்றிடத்திற்கும் மிகப் பொருத்தமான விடையை அடைப்புக்களிலிருந்து தெரிவுசெய்க.*


நிமலன் இசையில் மிகுந்த விருப்பத்தைக் கொண்டுள்ளான். ஆகவே, பெற்றோர்கள் அவனை அதற்காக 31) .................... [1. பயிற்சியளிப்பதற்கு 2. உற்சாகப்படுத்துவதற்கு 3. வழிப்படுத்துவதற்கு] இசை வகுப்பிற்கு அனுப்பினர். நிமலன் மிகவும் விருப்பத்துடன் வகுப்பிற்குத் தவறாமல் சென்று வயலின் 32) ....................[1. பாட 2. வாசிக்க 3. அடிக்க] நன்றாகக் கற்றான். அவனுடைய பெற்றோர் தமது மகனைப் பற்றி மிகவும் 33) ............ [1. மகிழ்ச்சி 2. கவலை 3. இரக்கம்] அடைந்தனர்.

★ *தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்கிடையே மிகச் சரியான கருத்துள்ள வாக்கியத்தைத் தெரிவுசெய்க.*

34)
1. அங்குமிங்கும் இருந்த ஒரு மரத்தின் கிளை மீது புறா பார்த்தது.
2. ஒரு மரத்தின் கிளை மீது இருந்த புறா அங்குமிங்கும் பார்த்தது.
3. அங்குமிங்கும் இருந்த புறா ஒரு மரத்தின் கிளை மீது பார்த்தது.

35)
1. பெற்றோரிடமும் எப்போதும் ஆசிரியர்களிடமும் மிகப் பணிவாகப் பிள்ளைகள் நடந்துகொள்ள வேண்டும்.
2. எப்போதும் பிள்ளைகள் மிகப் பணிவாக நடந்து பெற்றோரிடமும் ஆசிரியர்களிடமும் கொள்ளவேண்டும்.
3. பெற்றோரிடமும் ஆசிரியர்களிடமும் பிள்ளைகள் எப்போதும் மிகப் பணிவாக நடந்து கொள்ள வேண்டும்.

★ *அருகே காணப்படும் உருவை அவதானித்து, 36 தொடக்கம் 38 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*




36) சதுரத்திற்கு மட்டும் உரிய இலக்கம் எது? ....................................

37) வட்டத்திற்கும் முக்கோணத்திற்கும் மட்டுமே உரிய இலக்கம் எது? ........................

38) வட்டம், சதுரம், முக்கோணி ஆகிய மூன்றிற்கும் பொதுவான இலக்கம் எது?

.................................................

★ *39 ஆம், 40 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு எழுத்து நிரையிலும் ஒரு நல்ல இயல்பைக் காட்டும் ஒரு கூற்று மறைந்துள்ளது. இக்கூற்றின் எழுத்துக்களிடையே சேர்க்கப்பட்டுள்ள பொருத்தமற்ற எழுத்துக்களை நீக்கும்போது கிடைக்கும் அந்தக் கருத்துள்ள கூற்றைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*

39) இ க ள வு மை கா யி வ ற் சி க மு ல் சு வி டு சி ல் லை யி ரி ல் கொ எ ண் மு டா த் டா து.

..........................................................................

..........................................................................

40) நோ ன் ய த ற் பி ற ம வா ழ் யி வே ம் கு பா றை வ நி ற் த ற உ செ சு ல் த வ டு ம்.

..........................................................................

### வினாத்தாள் -1 இற்கான விடைகள்

*(நொவெம்பர் 9,16 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

| | | | |
|---|---|---|---|
| 01. 3 | 12. 1 | 23. 2 | 34. 2 |
| 02. 2 | 13. 2 | 24. 2 | 35. 3 |
| 03. 2 | 14. 2 | 25. 2 | 36. 2 |
| 04. 3 | 15. 1 | 26. 2 | 37. 4 |
| 05. 2 | 16. 2 | 27. 3 | 38. 3 |
| 06. 3 | 17. 1 | 28. 2 | 39. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து |
| 07. 3 | 18. 3 | 29. 2 | |
| 08. 2 | 19. 2 | 30. 3 | 40. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் |
| 09. 2 | 20. 2 | 31. 1 | |
| 10. 3 | 21. 3 | 32. 2 | |
| 11. 1 | 22. 1 | 33. 1 | |

# முகாம்களைச் சுற்றி வேலிகளை அமைப்போம்

## பாடசாலை சாரணியர்களுக்கு சில ஆலோசனைகள்

வீடு உட்பட, எந்தவொரு கட்டட வளவுக்குள் அல்லது தோட்ட வளவுக்குள் உட்பிரவேசிக்கவும் வெளியேறவும் என படலைகள் (Gates) அமைக்கப்பட்டிருப்பது பொதுவான விடயமாகும். இந்த படலைகள் வளவைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள மதில் அல்லது வேலிகளிலேயே பொருத்தப்பட்டிருக்கும். அந்த வகையில், குறித்த வளவின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் வேலிகள் அல்லது மதில்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இதனை மாணவர்கள் அறிந்திருப்பது மிகவும் அவசியம். இதற்குரிய சிறந்த பயிற்சியை சாரணியர் இயக்கம் மாணவர்களுக்கு பயிற்றுவிக்கின்றது. அதனடிப்படையில், சாரணியர் முகாம்கள் அமைக்கப்படுகின்றபோது, முகாம்களைச் சுற்றி வேலிகள் அமைப்பது குறித்து சாரணியர்கள் கவனம் செலுத்துதல் அவசியம்.



முறையற்ற விதத்தில் அமைக்கப்பட்டுள்ள முகாம் வேலிகள்

### முகாம் வேலிகள் அத்தியாவசியமானவையா?

முகாம்களை திட்டமிடும்போது, முகாமில் கலந்துகொள்வோரின் கூடாரங்களில் சாப்பாட்டு மேசை, சமையலறை மற்றும் பிற உபகரணங்களை வைத்தல் என்பன அங்கீகரிக்கப்பட்ட ஒரு முறையின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட முகாமின் ஒவ்வொரு வடிவமைப்பும் திட்டமிடலும் முகாம் வேலிகள் அமைக்கப்பட்ட பின்னரே தீர்மானிக்கப்படும்.

### பலம் மற்றும் நீடித்த தன்மை

பொதுவாக, சாரணியர் முகாம் 4-5 நாட்களுக்குள் நடாத்தப்பட்டு நிறைவு செய்யப்படும். எனவே, முகாம் பணிகள் நிறைவடையும்வரை 'முகாம் வேலிகள்' பலமானதாகவும் உறுதியானதாகவும் நீடித்த தன்மை கொண்டதாகவும் இருக்க வேண்டும். வேலியை அமைப்பதற்காக, நாட்டப்பட்ட தூண்கள் ஆடி அசையாதவாறு உறுதியானதாக இருக்க வேண்டும். சாரணியர் பயிற்சி முகாம்களில் கற்றுக்கொண்ட முடிச்சுப் போடுதல், கட்டுதல் போன்ற விடயங்களை வேலிகளை அமைக்கும்போது, கையாளுதல் வேண்டும். காற்றுக்கு ஈடு கொடுக்காத வேலிகள் சாரணியர் முகாம் பகுதியில் இருக்கவே கூடாது.

### படைப்பாற்றல்

சாரணியர் முகாம் அமைப்பாளர்களின் படைப்பாற்றலை கணிக்கக்கூடிய ஓர் உபகரணமாக முகாம் வேலிகளைக் கருத முடியும். படைப்பாற்றல் மிக்க முகாம் அமைப்பாளர்கள் முகாம்களை அமைத்து நிறைவடைந்த பின்னர், எஞ்சும் பலகைகளையும் மூங்கில்களையும் வேலிகளை அமைக்கப் பயன்படுத்திக்கொள்வார்கள். இவ்வாறான பலம் மிக்க, உறுதியான முகாம் வேலிகள் உங்களது முகாம்கள் அமைக்கப்பட்டிருக்கும் சூழலில் இருக்க வேண்டும் என்பதை எப்போதும் கருத்தில்கொள்ளுங்கள்.



### முகாம் வேலிகளுக்கும் புள்ளிகள் வழங்கப்படும்

இங்குள்ள புகைப்படங்களை அவதானியுங்கள். பார்த்தவுடனேயே, மனதைக் கொள்ளைகொள்ளும் விதத்தில் இந்த வேலி அமைக்கப்பட்டுள்ளது. இந்த வேலி தும்புக் கயிற்றால் அமைக்கப்பட்டு நிறமூட்டப்பட்ட பலா இலைகள் அதில் தொங்கவிடப்பட்டுள்ளன.

சரியான முறையில் நடாத்தப்படும் சாரணியர் முகாமொன்றில் ஒவ்வொரு நாள் காலையிலும் முகாம் பற்றிய ஆராய்வு நடைபெறும். சாரணர் முகாம் நிறைவு நாளில் அங்குள்ள சிறந்த முகாம் தெரிவுசெய்யப்பட்டு, அதற்கான மதிப்பீட்டு விருது வழங்கப்படும். இதன்படி, திறந்தவெளியில் அமைக்கப்படும் முகாமொன்றைச் சூழ நிர்மாணிக்கப்படும் வேலிகள் குறித்து பின்வரும் விடயங்கள் பற்றி கவனத்தில்கொள்ளப்படும். அவையாவன:

* பலம் (உறுதித்தன்மை) * கையாளப்படும் நுட்ப முறைகள்
* கையாளப்பட்டுள்ள முடிச்சு மற்றும் கட்டும் முறைகள்
* படைப்பாற்றல்
* முகாமொன்றின் நாற்புற எல்லைகளும் வேலிகளினால் பாதுகாக்கப்பட்டுள்ளனவா? என்பனவாகும். எனவே,மேற்கூறப்பட்டுள்ள விடயங்கள் மீது அக்கறை செலுத்தப்பட்டிருப்பின், அவற்றுக்காக முழுமையான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்பது உறுதி.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இரும்பு பாவனையின் ஆரம்பம்

**இலங்கையில் மாத்திரமன்றி, உலக நாடுகள் அனைத்திலும் மனிதனால் முதன்முதலில் புராதன தொழில்நுட்பத்திற்கமைய, தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது கற்களாலான ஆயுதங்கள் ஆகும். இதன்படி, ஆரம்பகால மனிதர்கள் தமது பரிணாம வளர்ச்சிக்காலத்தில் 3/4 பகுதியை கற்களாலான ஆயுதங்களைத் தயாரிப்பதற்கே செலவிட்டுள்ளதாக வரலாறு கூறுகின்றது**



இரும்புத் தாது

## உலோகக் கண்டுபிடிப்பு

மானிட வளர்ச்சியின் அதிகமான காலப்பகுதியை கற்களாலான ஆயுதங்களையும் உபகரணங்களையும் தயாரிப்பதற்கு மனிதன் செலவு செய்தபோதும், பின்னர் படிப்படியாக, கற்காலத்தில் இருந்து விடுபட்டு பல்வேறு உபகரணங்களைப் பயன்படுத்தும் யுகத்திற்குள் மனிதன் நுழைந்துள்ளான். இதன் பிரதிபலனாக இற்றைக்கு 15,000 வருடங்களுக்கு முன்னர் மனிதனால் உலோகம் பயன்படுத்தும் முறை கண்டுபிடிக்கப்பட்டது.

அதற்கமைய, மனிதன் முதன்முதலில் கண்டுபிடித்த உலோகம் தங்கமாக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். அதன் பின்னரே வெள்ளி, செம்பு, இரும்பு ஆகிய உலோகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மனிதனின் நீண்டகால ஆராய்ச்சியின் பிரதிபலனாக, இந்த உலோகங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்க முடியாது.மாறாக, நீண்டகால அனுபவத்தின் பிரதிபலனாகவும் தற்செயலாக நிகழ்ந்த கண்டுபிடிப்பாகவுமே இந்த உலோக கண்டுபிடிப்பு நிகழ்ந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

## இலங்கையில் இரும்பு பாவனை

இலங்கையில் நீண்டகாலத்திற்கு முன்பிருந்தே இரும்பு உலோகம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமை ஆய்வுகளினூடாக தெரிய வந்துள்ளது. தொல்பொருள் ஆராய்ச்சிகளின்படி, இலங்கையில் கி.மு.900 வருடங்களுக்கு முன்னரே இரும்பு உலோகம் பயன்படுத்தப்பட்டிருப்பதாக சான்றுகள் கூறுகின்றன. அதாவது, 2,900 வருடங்களுக்கு முன்பிருந்தே, இலங்கையில் இரும்புலோகம் பயன்படுத்தப்பட்டிருப்பதை தொல்பொருள் ஆய்வாளர்கள் உறுதிசெய்துள்ளனர்.

## இலங்கையில் தொல்பொருள் ஆய்வுகள்



அநுராதபுரத்தின் பண்டைய நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சிகளின்படி, கி.மு. 900 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அங்கு இரும்பு உலோகம் பயன்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

அத்துடன், அண்மையில் தெற்குப் பகுதியில் திஸ்ஸமஹாராமவை அண்டிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் அகழ்வுப் பணிகளின்போது, கி.பி.1000-900 வரையான காலப்பகுதிகளில் வாழ்ந்த மனிதர்கள், கற்களாலான ஆயுத பாவனையில் இருந்து விடுபட்டு, இரும்பு உலோக ஆயுதங்களைப் பயன்படுத்தியமைக்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன், இக்காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்ட இரும்பு எத்தகைய தன்மையுடையதாக இருந்திருக்கும் என்பது பற்றி அறிந்துகொள்வதற்கான போதிய சான்றுகள் அண்மையில் இரண்டு பிரதேசங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அதில் பிரதான சான்றானது, அலகொளவெவ எனும் பிரதேசத்தில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ளது. சீகிரியா குன்று அமைந்துள்ள இடத்திலிருந்து சுமார் 8 1/2 கிலோ மீற்றர் தூரத்திலேயே, அலகொளவெவ எனும் பிரதேசம் அமைந்துள்ளது.இப்பிரதேசத்தின் தெஹிகஹ எலகந்த எனும் இடத்திலிருந்தே புராதன கால இரும்பு உற்பத்திச்சாலையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

1988, 1990 மற்றும் 1991 ஆம் ஆண்டுகளில் இவ்விடத்தில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர், அங்கு மேற்கொள்ளப்பட்ட மண்வள ஆராய்ச்சியின்போது, மண்ணில் இரும்புத் துரு கலந்திருப்பது அவதானிக்கப்பட்டது. அத்துடன், இப்பகுதியில் சுமார் 3,750 மீற்றர் பரப்பளவுக்கு இந்த இரும்புத் துரு பரவிக் கிடப்பது அவதானிக்கப்பட்டது.

## இரும்பை வெப்பமேற்றுதல்

இதனை அடுத்து இப்பிரதேசத்தில் தொடர்ந்து நடத்தப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சியின் விளைவாக, இரும்பை பழுக்கக் காய்ச்சுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட நிலக்கீழ் சுரங்க அடுப்புகள் (சூளைகள்) கண்டுபிடிக்கப்பட்டன. நிலத்தில் நீள்வட்ட வடிவிலான குழிகள் வெட்டப்பட்டே இந்த சூளைகள் அமைக்கப்பட்டிருந்தன. இதன் அடியில் கருங்கற்கள் இடப்பட்டிருந்தன. இந்த சூளைகளின் உயரம் சுமார் இரண்டு அடி வரையில் இருக்கும். சூளையில் நெருப்பு மூட்டப்படும்போது, உஷ்ணத்தை அதிகரிக்க இயற்கை வளி பயன்படுத்தப்பட்டிருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

இதேபோன்று, பலாங்கொடைக்கு அண்மித்ததாக உள்ள சமனலவெவ என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இரும்பு சூளைக்குத் தேவையான வளியானது, இயற்கையாகக் கிடைக்கும் பருவக்காற்றினூடாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

## விஞ்ஞான ரீதியான கருத்து

பொதுவாக, இரும்பைப் பெற்றுக் கொள்வதற்காக, சாதாரண சூளைகளில் மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுவது லிமோனய்ட் மற்றும் மீமடைம் கலந்த இரும்புத் தாதுக்கள் ஆகும். இதற்குக் காரணம், இவை சாதாரண சூளையில் சூடேற்றக்கூடிய கனத்தன்மையை கொண்டிருப்பதாலாகும். எனினும், தெஹிகஹ எலகந்த இரும்பு உருக்கு சூளையில் பயன்படுத்தப்பட்டிருப்பது மெக்னடைட் உள்ளடங்கியிருக்கும் இரும்புத்தாதுக்களாகும். அதனை சூடேற்றி இரும்பை முடிவுப்பொருளாகப் பெறுவதென்பது மிகவும் சிரமமான பணியாகும். எனினும், சிறந்த தொழில்நுட்ப வசதி இருக்குமானால் அதனை சுலபமாகப் பெறலாம். இதன்படி பார்க்கும்போது, தெஹிகஹ எலகந்த எனும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இரும்பு உருக்கு சூளையானது, சிறந்த தொழில்நுட்பத் திறனைக் கொண்டிருந்திருக்கும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஆ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்து இலக்கியங்கள் 3,000 வருடங்கள் பழைமை வாய்ந்தவை. ஆனால், சிறுவர்களுக்கான இலக்கியங்களோ, கடந்த 300 வருடங்களாகவே புகழ் பெற்று வருகின்றன. அதற்கு முன்னர் எமது மூதாதையர்கள் கூறிய வாய்மொழிக் கதைகளையும் பாடல்களையுமே சிறுவர்கள் கேட்டறிய வேண்டி இருந்தது. சிறுவர் கதைகளின் ஆரம்பகாலத்தில் சிறுவர்களுக்குப் புத்திமதி கூறும் வகையிலான கதைகள்தான் உருவெடுத்தன. 19 ஆம் நூற்றாண்டில் வீரதீரக் கதைகள், மர்மக்கதைகள் என்று பலவகையான கதைகள் தோற்றம் பெற்றன. அதன்படி, சிறுவர்களுக்காக எழுதி வெளியிடப்பட்டு உலகளவில் புகழ்பெற்ற சிறுவர் கதைகள் சிலவற்றையும் அவற்றை எழுதியவர்கள் பற்றியும் பார்ப்போம்

## சிறுவர்களுக்கான நூல்கள் பலவிதம்

சிறுவர்களுக்காக எழுதப்படும் கதைகள் மட்டுமன்றி, அவர்கள் விரும்பி வாசிக்கும் கதைப்புத்தகங்களும் அவர்களைக் கவரும் விதமாகவே வடிவமைக்கப்படுகின்றன. அதன்படி, அன்றிலிருந்து இன்றுவரை, சிறுவர்களுக்கான இலக்கியங்கள், கதைகளை எழுதி வடிவமைக்கும்போது அதன் வெளியீட்டாளர்கள் புதுப்புது உத்திகளைக் கையாள்வதைக் காணலாம். இதனடிப்படையிலேயே, பாரம் குறைந்த, கையடக்கமான, சட்டைப்பையில் வைத்துக்கொள்ளக்கூடிய அளவுகளில் சிறுவர்களுக்கான நூல்கள் வெளிவரத் தொடங்கின. சதுரம், செவ்வகம், வட்டம் என்று நூலின் வடிவத்திலும் வேறுபாடுகள் காணப்பட்டன. அவற்றின் எழுத்துக்கள் வாசிப்பதற்கு இலகுவாக பெரிதாகவும் தெளிவாகவும் அச்சிடப்பட்டன.

சிறுவர் கதைப்புத்தகங்களைப் பொறுத்தவரையில், கூறப்படும் விடயங்களை நன்கு புரிந்து கொள்வதற்கும் அழகை ரசிப்பதற்கும் காட்சிகளை மனதில் பதிய வைக்கவும் ஏற்ற விதமாக நூல்கள் அழகிய வண்ணப் படங்களால் அலங்கரிக்கப்படுகின்றன. அத்துடன், படங்களை மட்டுமே பிரதானமாகக்கொண்ட சித்திரக்கதைகளும் உள்ளன. இதில் படங்களைப் பார்த்து தாமே கதையை விளங்கிக்கொள்ள சிறார்கள் முனைகின்றனர். இதனூடாக, சிறார்களின் சிறந்த ஆற்றல் வளர்க்கப்படுகின்றது.மேலும், சிறுவர்கள் இலகுவில் கிழிக்க முடியாதபடி தடித்த உறையிட்ட நூல்களும் கறையான்களால் பாதிப்படையாத வகை புத்தகங்களும் பிள்ளைகளுக்காகவே அதிகம் உருவாக்கப்படுகின்றன. சிறுவர் கதை நூல்களில் 'pop-up' எனப்படும் படங்கள் வெளித்தள்ளப்படும் வகை நூல்கள் பிரபல்யமானவை. இவை மட்டுமல்லாமல் பளிச்சிடும் (shining) படங்கள், உருமாறும் படங்கள், முப்பரிமாண (3D) படங்களைக்கொண்ட கதைப்புத்தகங்களும் சிறுவர்களைக் கவர்வதற்காக தயாராகின்றன.



# உலகப் புகழ் பெற்ற சிறுவர் க...

## நீதிக்கதைகள் (Fables)




இதற்காக, சிந்திக்கக்கூடிய, பேசக்கூடிய மற்றும் மனிதரைப் போலவே நடந்துகொள்கின்ற மனித குணங்களைக் கொண்ட மிருகங்கள் கற்பனை வடிவில் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய நீதிக்கதைகள் சிறார்கள் மத்தியில் மிகப் பிரபல்யமாகவே விளங்குகின்றன.



முயலும் ஆமையும் கதை




மழலைகளுக்கு நற்கருத்துக்களை புகட்டவும் மற்றும் நற்பண்புகளை வளர்ப்பதற்கும் உருவாக்கப்பட்டவைதான் நீதிக்கதைகள். இவை அளவில் சிறியவை. இக்கதைகள் அநேகமாக, மிருகங்களைச் சுற்றி உருவாக்கப்பட்டவையாகவே காணப்படுகின்றன.




## ஈசோப்பின் நீதிக்கதைகள்

பண்டைய கிரேக்கத்தைச் சேர்ந்த 'ஈசோப்' (Aesop) என்பவர், கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் 'ஈசோப்பின் நீதிக்கதைகள்' (Aesop's Fables) என்ற கதைத்தொகுப்பை உருவாக்கினார். இந்தக் கதைகள் முதலில் வாய்வழியாகவே கூறப்பட்டு வந்தன. 4 ஆம் நூற்றாண்டிலேயே அவை எழுத்து வடிவம் பெற்றன. 'பேராசை பெருநட்டம்', 'விடாமுயற்சி' போன்ற பல அறக்கருத்துக்களை வெளிப்படுத்தும் ஈசோப்பின் கதைகள், வரலாற்றில் நீங்கா இடம்பிடித்தவை. 'முயலும் ஆமையும்', 'நரியும் திராட்சைக் கொடியும்', 'தாகம் தீர்த்த காகம்', 'வானில் பறந்த ஆமை' போன்றவை இவற்றில் மிகப் பிரபல்யமானவை.

## நவீன நீதிக்கதைகள்

### ஜேம்ஸ் T ஹேர்பர்

'பாட்டி வடை சுட்ட கதை' நம் சிறார்களிடையே மிகவும் பிரபல்யமானது. அதில், காகம் வடையை நரியிடம் ஏமாந்து பறிகொடுத்தது. இது பழைய கதை. எனினும், இதன் புதிய கதையில் வடையை காலால் பிடித்துக்கொண்டு காகம் பாட்டுப்பாடியதாகக் கூறப்படுகின்றது. இது அக்கதையின் புதிய வடிவமாகும். அந்தப் புதிய கதையை வடிவமைத்தவர் ஜேம்ஸ் T ஹேர்பர் (1894-1961) ஆவார். இவர், பழைய கதைகளை புதிய உலகிற்கு ஏற்றவிதத்தில் மாற்றி அமைத்துப் புகழ்பெற்றார். அத்தோடு, சிறுவர்களின் ஆக்கத்திறனையும் வளர்த்தார். இன்றைய காகங்கள் ஏமாறுவதில்லை. அவ்வாறே, நீங்களும் ஏமாறக்கூடாது என்ற புதிய அர்த்தத்தை தமது புதிய கதையின் ஊடாக வழங்கினார். அத்தோடு, பல கதைகளை சிறுவர்களே தமக்கேற்ற வடிவில் மாற்றியமைத்துக்கொள்ளும் உத்தியையும் புகுத்தினார். உதாரணமாக, லிட்டில் ரெட் ரைடிங் ஹூட் (Little Red Ridding Hood) கதையில், பாட்டிபோல் வேடம்பூண்டு கட்டிலில் படுத்திருப்பது ஓநாய்தான் என்று அறிந்துகொண்ட சிறுமி, அதனை துப்பாக்கியால் சுட்டு விடுகிறாள் என்று கூறப்பட்டுள்ளது.



ஜோஎல் ஹெரிஸ்



ரீமஸ் மாமா



பியெட்ரிக்ஸ் பொட்டர்

### ரீமஸ் மாமாவின் கதைகள்

அமெரிக்க எழுத்தாளரான ஜோஎல் ஹெரிஸ் (Joel Harris), 'ரீமஸ் மாமா' (Uncle Remus) என்ற பாத்திரத்தை உருவாக்கிப் பிரபல்யமடைந்தார். அமெரிக்காவிற்கு அடிமையாக கொண்டுவரப்பட்ட கறுப்பினத்தவரான இவரின் கதைகள் கறுப்பினத்தவரின் வாய்வழிக் கதைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இவரது கதைகளில் புத்திசாதுர்யம் மிக்க 'பிரேயர்' முயலின் கதையும் அடங்கும்.

### பியெட்ரிக்ஸ் பொட்டர்

பிரித்தானியரான 'பியெட்ரிக்ஸ் பொட்டர்' (Beatrix potter). சிறுவயதிலிருந்தே ஓவியம் வரையும் ஆற்றலைக் கொண்டிருந்தார். அவரின் முதலாவது நூலாக அமைந்தது பீட்டர் முயலின் கதை (A Tale of Peter Rabbit)ஆகும். இது பல மொழிகளுக்கு மாற்றம் செய்யப்பட்டு உலகெங்கும் பிரபலமான ஒரு கதையாகும். 1901 ஆம் ஆண்டே இக்கதை வெளிவந்தது.



லிட்டில் ரெட் ரைடிங் ஹூட்

இதைத்தவிர, 'நுட்கின்' என்ற அணிலை வைத்து மிகச் சுவாரஸ்யமான கதையொன்றையும் இவர் எழுதினார். இதில் தவறுசெய்யும் அணிலுக்கு தக்க தண்டனையும் கிடைக்கிறது. இவர் எழுதிய நவீன நீதிக்கதைகளின் திருப்பங்கள் மிகுந்த ரசனைக்குரியவை.

உலகெங்கிலுமுள்... மாயக்கதைகளில் சி... காண முடியும். இன்... கதைகள் ...க்கென ... துள்ளன... தவிதமா... களைக்கொண்ட ம... குகளையும் உள்ள... படைக்கப்படுகின்ற...

### ஹேன்ஸ் கிறி...

டென்மார்க் நாட்ட... யினால், உலகெங்கு... கதைகள் நூல் வடிவ...



ரிட்டார். பின்னர் உ... வதும் பிரயாணம் செய்து கதைகளை சேகரித்து, 160 க்கும் மேலான கதைகளைத் தொகுத்... Ugly Duckling (அ... குட்டி) என்ற கதை ...



### சார்ல்...

சார்ள்ஸ் பெரோல்... பிரான்ஸ் நாட்டைச் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதைகளும் எழுத்தாளர்களும்

## சிறுவர் சித்திரக்கதை நூல்கள் (Picture story Books)



ஒபிஸ் பிக்டஸ்

'ஒபிஸ் பிக்டஸ்' (Orbis Pictus) உட்பட, ஏராளமான சிறுவர் சித்திரக்கதைகள் உலகில் இன்றுவரை பிரபல்யமாகவே திகழ்கின்றன. சிறுவர்களுக்கென்று படைக்கப்பட்ட நூல்களில் முதன்முதலில் வெளியான சித்திரக்கதை நூலாகக் கருதப்படுவது இந்த 'ஒபிஸ் பிக்டஸ்' என்ற நூலாகும். இதனை 'விசிபல் வேர்ல்ட்' (Visible World) என்றும் அழைப்பர். 1658 இல் வெளியான இந்த நூலை ஜோன் ஆமொஸ் கொமெனியஸ் (John Amos Comenius) என்பவர் எழுதியிருந்தார். சித்திரங்கள் அல்லது படங்களால் நிறைந்த இக்கதைகளுக்கு நீண்ட வரலாறு உண்டு. இந்த சித்திரங்கள் மூலமாக, கதைகளை இலகுவாக கற்பனை செய்துகொள்ள முடிவதோடு, நிறம், உருவ அமைப்பு போன்ற பல்வேறு விடயங்கள் குறித்த அறிவும் பெறப்படுகின்றது.

## டொக்டர் சூஸ்




டொக்டர் சூஸ்

டொக்டர் சூஸ் (Dr. Seuss), ஓர் அமெரிக்க சித்திரக் கலைஞராவார். அவரின் உண்மையான பெயர் தியெடோர் கிசெல் என்பதாகும். எனினும், நூல்களை எழுதுவதற்காக, இவர் வைத்த புனைபெயர்தான் 'டொக்டர் சூஸ்'. இவரின் கதைகளில் ஒரு சாந்தத்துடனான பாடல்களும் (Rhyme) அமைந்திருக்கும். இவை சிறுவர்களின் ரசனையை கூட்டுவதுடன், நல்ல பொழுதுபோக்கு அம்சமாகவும் அமைகின்றன. இவரது கைவண்ணங்களில் 'The cat in the hat' மற்றும் 'Grinch' போன்றவை ஹொலிவுட் வெள்ளித்திரைகளிலும் தயாரிக்கப்பட்டு உலகெங்கும் வலம் வந்துள்ளன. ஒரு தொப்பியுடனான கறுப்பு-வெள்ளை பூனையைக் கொண்டதுதான் 'The cat in the hat' என்ற கதை. அம்மா வீட்டிலில்லாத நேரத்தில் வீட்டுக்கு வரும் இந்த பூனையுடன் வீட்டிலுள்ள சிறார்களின் சேட்டைகள் பற்றித்தான் இந்தக் கதையூடாக, வெளிப்படுத்தப்பட்டது. இவை தவிர இவரின் 'Hortan heres a who' மற்றும் 'How the Grinch stole the Christmas' போன்ற கதைகளும் உலகப்புகழ் பெற்றவை.





'ஹோர்டன் ஹியர்ஸ் அ ஹூ' எனும் படைப்பின் திரைப்படப் பிரதி






ஹவ் த கிரிஞ் ஸ்டோல் த கிறிஸ்மஸ்

## வெயார் த வைல்ட் திங்ஸ் ஆர்

1963 இல் 'வெயார் த வைல்ட் திங்ஸ் ஆர்' (Where the wild things are) என்ற கதை வெளிவந்தது. இதை எழுதியவர் 1928 இல் பிறந்த அமெரிக்கரான மொரிஸ் சண்டேக் என்பவராவார். இந்தக் கதையில் மெக்ஸ் எனும் சிறுவன் ஒரு படகில் ஏறி தீவொன்றை வந்தடைகிறான். அங்கு வாழும் விநோதமான உயிரினங்களுடன் வீர சாகஸங்களில் ஈடுபட்டு இறுதியில் தீவின் அரசனாகும் கதை விவரிக்கப்பட்டுள்ளது. ஆனால், இது சிறுவர்களைப் பயமுறுத்தும் விதமாக இருப்பதாகவும் அதனால் இது சிறுவர்களுக்கு ஏற்றதன்று என்ற விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன.

இரஞ்சித் ஜெயகர்







'வெயார் த வைல்ட் கிங்ஸ் ஆர்' எனும் சிறுவர் சித்திரக்கதையை வைத்து தயாரிக்கப்பட்ட ஹொலிவுட் திரைப்படம்

## மரபுக்கதைகளும் மாயக்கதைகளும்

...லுமுள்ள மரபுக்கதைகள் மற்றும் ...ரில் சில ஒற்றுமைகளை நாம் ... இன்றைய சிறுவர் உலகில் இக் ...கென ஒரு ...ி இடத்தைப் பிடித் ...விதமான ...வங்கள், இயல்பு ...ட மனிதர்களையும் மாய விலங் ...ள்ளடக்கியதாக இக்கதைகள் ...கின்றன.

## கிறிஸ்டியன் எண்டர்சன்

... நாட்டவரான இவரின் முயற்சி ...கெங்கும் பரவிக்கிடந்த மரபுக் ... வடிவம் பெற்றன. பல கதைகளுக்கு எண்டர்சன் தன் கற்பனையையும் சேர்த்துப் புதுப்பொழிவூட்டினார். இவர், 1835 இல் தனது முதலாவது நூலை வெளியிட்டார். அதற்கு அவர் 'Fairy Tales' எனப் பெய... ...ர் உலகம் முழு... ...தொகுத்து வெளியிட்டார். The ... (அவலட்சணமான வாத்துக் ...கதை அவற்றில் பிரபல்யமானது.





## ...ள்ஸ் பெரோல்

...ரோல் (Charles Perrault), ...டைச் சேர்ந்தவர். இவர், 1628 ஆம் ஆண்டு பிறந்தார். எண்டர்சனைப் போலவே ஏராளமான மரபுக்கதைகளுக்கு எழுத்து வடிவம் கொடுத்தார். கி.பி.1667 ஆம் ஆண்டு அவரின் 'கடந்த காலக் கதைகள்' (Tales of the past times) எனும் நூலில் 'சிண்டரெல்லா' (Cinderella) கதை பிரசுரமானது. மூலக்கதையிலிருந்து பல ருசிகரமான மாற்றங்களுடன் அவர் இதை வடிவமைத்திருந்தார். இன்று பல திரைப்படங்களாகவும் திரைத்தொடர்களாகவும் உருவாகி விட்ட இந்த சிண்டரெல்லா கதையானது, இன்றைய சிறுவர்களின் மனதில் நீங்கா இடம்பிடித்துவிட்டது.



## க்ரிம் சகோதரர்கள்

க்ரிம் சகோதரர்கள் (Brothers Grimm) வடிவமைத்த மாயக்கதைகளும் மிக அற்புதமானவை. ஜேர்மனிய சகோதரர்களான ஜேக்கப் (1785-1863) மற்றும் வில்ஹெல்ம் (1786-1859) ஆகிய இருவரும் தான் க்ரிம் சகோதரர்களின் மாயக்கதைகளை எழுதி வெளியிட்டனர். உலகப் புகழ்பெற்ற 'ஸ்னோ வைட்' (Snow white) மற்றும் 'ஹென்சல் என்ட் கிரேட்டல்' (Hansel and Gretel) போன்ற கதைகள் இதில் அடங்குகின்றன. இவர்கள் இக்கதைத் தொகுப்பை எழுதுவதற்காக, வாய்மொழிக் கதைகளையும் மாயக்கதைகளையும் தேடி உலகெங்கும் பயணங்களை மேற்கொண்டனர்.



## குரங்கு ராஜா மற்றும் தேவலோக கலவரம்

சீன இலக்கியத்தில் வரும் ஒரு வீரன்தான் 'Monkey king' எனப்படும் 'குரங்கு ராஜா'. பூக்கள், பழங்கள் நிறைந்த மலையில் குரங்கு ராஜாவின் வீர சாகசங்களை மையமாக வைத்து படைக்கப்பட்ட இந்த அற்புத காவியத்தை, சீன கதாசிரியரான 'செங்' என்பவர் எழுதியுள்ளார். இக்கதாபாத்திரம் வாசகர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது. இது தவிர, இவரது கதைகளில் 'மேற்கு நோக்கிய பயணம்', 'வெண்குதிரையின் மீதேறி திரிபீடகத்தை கத்தை தேடிச் செல்லும் கதை' போன்றவை மிகப் பிரசித்தி பெற்றவை. குரங்கு ராஜாவின் கதாபாத்திரம் உள்ளடங்கிய தொலைக்காட்சித் தொடர், திரைப்படம் என்பன இன்றளவிலும் தயாரிக்கப்படுகின்றன.



குரங்கு ராஜாவும் திரிபீடக பிக்குவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுகளில் அடங்கியுள்ள நச்சுப் பதார்த்தங்கள்



தேயிலை - தனின்
கோப்பி - கோஃபின்
புகையிலை - நிக்கோட்டின்
சோயா - சோயின்
மரவள்ளி - ஹைட்ரோசயனிக்கமிலம்
பருத்தி - கொசுப்போல்

எம்.எப்.எப்.நிப்லா,
க/இக்ராஃ மு.ம.வித்., உலப்பனை.

# நுண்ணங்கிகள் (Micro - organisms)



- வெறுங்கண்களால் தெளிவாக அவதானிக்க முடியாத அங்கிகள் நுண்ணங்கிகள் எனப்படும். இவை 5 வகையானவை.
  அவையாவன:
  1. பக்ற்றீரியா (Bacteria)
  2. அல்கா (Algae)
  3. புரோட்டோசோவா (Protozoa)
  4. ஃபங்கஸ் (Fungi)
  5. வைரஸ் (Virus) என்பனவாகும்.
- இவற்றுள் உயிருள்ளதும், உயிரற்றதுமான இயல்பைக் கொண்ட நுண்ணங்கி வைரஸ் (Virus) ஆகும். இவை பளிங்குருவாக்கும் ஆற்றலைக் கொண்டவை.
- அல்கா (Algae) பச்சையத்தைக் கொண்ட நுண்ணங்கியாகும்.
- பக்றீரியா (Bacteria) தனிக்கல அங்கியாகும்.

ஏ.எம்.எஃப்.ஷஹானா,
இ/ஜெய்லானி தே.பாட., பலாங்கொடை.

# முட்டாள் விறகுவெட்டி



ஒரு சிறிய கிராமத்தில் பரமசிவம் எனும் விறகுவெட்டி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் ஒருநாள் விறகு வெட்டச் சென்றான். விறகினை வெட்டிய அவன் களைப்பு மிகுதியினால் கோடரியை அங்கேயே வைத்துவிட்டு மரநிழலில் நித்திரையில் ஆழ்ந்தான். சிறிது நேரத்தின் பின்னர் நித்திரை விட்டெழுந்த பரமசிவம் அருகில் இருந்த கோடரியை எடுத்தான். வெகுநேரம் வெயிலில் கிடந்ததால் கோடரி நன்றாக சூடேறிக் காணப்பட்டது.

இதனால், பரமசிவம் அதிர்ச்சியடைந்தான். கோடரிக்கு காய்ச்சல்தான் வந்துவிட்டதென எண்ணி கோடரியை வைத்தியரிடம் எடுத்துச் சென்றான். அவனுடைய முட்டாள்தனத்தை உணர்ந்த வைத்தியர், ''கோடரியை குளிர்ந்த நீரில் போடு காய்ச்சல் தணிந்துவிடும்'' என்றார். பரமசிவமும் அவ்வாறே கோடரியை குளிர்ந்த நீரில் போட்டான். அப்போது,




அதன் சூடு தணிந்தது. இதனால், காய்ச்சல் நின்றுவிட்டது என்றெண்ணி நிம்மதியடைந்தான் பரமசிவம்.

சில நாட்களின் பின்னர் பரமசிவத்தின் மகனுக்கு காய்ச்சல் ஏற்பட்டு, அவனது உடல் தனலாய்க் கொதித்தது. இதன்போது, பரமசிவம் கோடரிக்கு காய்ச்சல் வந்தபோது வைத்தியர் நீரில்தானே போடச் சொன்னார் என்றெண்ணி, தனது மகனையும் ஆற்று நீரில் தூக்கிப்போட்டான். இதைக்கண்ட அயலவர்கள் அச்சிறுவனைக் காப்பாற்றி முதலுதவி செய்து வைத்திய சிகிச்சையும் அளித்தனர். பரமசிவத்தினுடைய முட்டாள்தானத்தை விசாரித்து அறிந்த அயலவர்கள் அவனுக்கு புத்திமதி கூறினர்.


ஆர்.பிரசன்யா,
என்பீல்ட் த.ம.வித்.,
டிக்கோயா.

# பருவ காலங்கள்



**கோடை காலம்:** இக்காலப் பகுதியில் வெப்பம் அதிகம். தாவரங்கள், தானியங்கள் என்பன வளர்ச்சியடையும். நீண்ட பகலும், குறுகிய இரவும் காணப்படும். ஜூன் 21 இல் வடவரைக் கோளத்திலும், டிசம்பர் 22 இல் தென்னரைக் கோளத்திலும் கோடைகாலம் ஆரம்பமாகும்.

**இலையுதிர்காலம்:** வெப்பம் படிப்படியாகக் குறைவடையும். இப்பருவ காலம் ஆரம்பமாக மரங்களின் இலைகள் உதிர ஆரம்பித்து விடும். சூழலானது வறண்டதாகக் காணப்படும். வடவரைக் கோளத்தில் செப்டம்பர் 23 இலும் தென்னரைக் கோளத்தில் மார்ச் 21 இலும் இலையுதிர் காலமாகும்.



**மாரிகாலம் (குளிர்):** இப்பருவத்தில் வெப்பநிலை குறைவாகக் காணப்படும். சூழல் முழுவதும் பனியால் மூடப்பட்டு வெண்மையாகக் காட்சிதரும். டிசம்பர் 22 இல் வடவரைக் கோளத்திலும் தென்னரைக் கோளத்தில் ஜூன் 21 இலும் மாரிகாலம் ஆரம்பமாகும்.

**இளவேனிற்காலம்:** வெப்பம் படிப்படியாக அதிகரிக்கும். மரங்களில் தளிர்கள், பூக்கள் என்பன அரும்பத் தொடங்கும். வடவரைக் கோளத்தில் மார்ச் 21 இல் இளவேனில் பருவம் ஆரம்பமாக தென்னரைக் கோளத்தில் செப்டெம்பர் 23 இல் இப்பருவம் ஆரம்பமாகும்.

சி.பியோகிறே,
நு/பீற்று த.வித்.,நுவரெலியா.

# ஆளுநர் ரொபர்ட் பிரௌவுன்றிக்



கண்டி ராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கான முயற்சியை மேற்கொண்டவர் ஆளுநர் ரொபர்ட் பிரௌவுன்றிக் ஆவார். அவர் ஆயுத பலத்தைவிட, தந்திரத்தால் கண்டியைக் கைப்பற்றுவதற்கு முனைந்தார். சிங்கள மொழியையும் அதன் கலாசாரத்தையும் நன்கறிந்த ஜோன் டொய்லி என்பவர் ஆளுநருக்கு உதவினார். ஜோன் டொய்லி மலையக அரச பிரதானிகள், பௌத்த பிக்குகள் முதலானோருடன் நன்கு பழகி அவர்களது கருத்துக்களை அறிந்துகொண்டதுடன், கண்டி ராச்சியத்தின் பலம், பலவீனம், மன்னனின் படைபலம், கரைநாட்டிலிருந்து கண்டிக்கான பாதைகள் மற்றும் தகவல்களை அறிந்துகொண்டார். அரசனின் செல்வங்கள் ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் இடம், யுத்தகாலத்தில் மன்னன் மறைந்திருக்கும் இடம் முதலியவற்றையும் மிக நுட்பமாக அறிந்துகொண்ட டொய்லி ஆளுநரின் ஆலோசனைப்படி, உயர்தரமான பிரித்தானிய மது பானங்களையும் மன்னனுக்கு அனுப்பி அவற்றுக்கு மன்னனை அடிமையாக்கினார். இத்தகைய நிகழ்வுகளினாலேயே கண்டியைக் கைப்பற்றுவதற்கான பின்னணி 1814 ஆம் ஆண்டளவில் உருவானது.

எச்.எம்.அஸ்லம்,
மட்/ஓட்டமாவடி தே.பாட.,
ஓட்டமாவடி.

# உன்வாழ்வு நம்பிக்கையில்...



தோல்விகளைக் கண்டு வாழ்வை
தொலைக்க நினைக்காதே!
ஏமாற்றங்களை எண்ணி
ஏங்கித் தவிக்காதே!
என் இந்தத் துன்பம்? அது-
என்றும் நிலைக்காதே!
தோல்வியை ஏணியாய் எண்ணி
ஏறி வென்றிடு!
ஏமாற்றத்தை அனுபவமாய்க்கொண்டு
எழுந்து நின்றிடு!
அலட்சியம் இல்லாமல்
இலட்சியத்திற்காய்
போராடு!
ஒரு நாள் அதை அடைந்திடுவாய்
இன்றைய வாழ்க்கையை
வாழ்ந்திடு உன்மேல் நம்பிக்கையில்!
நாளைய நாள் வரும் உன் கையில்!

பாத்திமா இர்பானா,
ஸாஹிரா கல்லூரி, தர்கா நகர்.

# இலங்கையின் பௌத்த வரலாற்று நூல்கள் சில...

- இலங்கையில் முதன்முதலாக எழுதப்பட்ட பௌத்த வரலாற்று நூல் - தீபவம்சம்
- துட்டகைமுனு மன்னனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட நூல் - மகாவம்சம்
- மகாவம்சத்தின் 2 ஆம் பகுதியெனக் கருதப்படும் ஆதாரம் - சூளவம்சம்
- தலதா பிக்குகளின் வரலாற்றைக் கூறும் நூல் - தாதவம்சம்
- ஜயஹ மகாபோதி பிக்குகளின் வரலாற்றைக் கூறும் நூல் - போதிவம்சம்
- புத்த புத்திர பிக்குவால் எழுதப்பட்ட நூல் - பூஜா வலிய
- கோட்டை காலத்தில் அரச கேசரிப் புலவரால் எழுதப்பட்ட நூல் - ரகுவம்சம்


எஸ்.பௌமியாஸ், மட்/ரிதிதென்ன இக்ரஃ வித்.,புணானை.

# ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு நிறுவனங்கள்

i. சர்வதேச அணுசக்திக் கழகம் - I.A.E.A
ii. ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் கலாசாரக்கழகம் - U.N.E.S.C.O
iii. சர்வதேச தொழிலாளர் நிறுவனம் - I.L.O
vi. உலக சுகாதார மற்றும் விவசாய நிறுவனம் - F.A.O
v. சர்வதேச தகவல் தொலைத்தொடர்புக்கழகம் - I.T.U
vi. உலக அறிவாண்மை நிதிக்கழகம் - W.I.P.O
vii. உலக சுகாதார நிறுவனம் - W.H.O
viii. சர்வதேச வளர்ச்சி அமைப்பு - I.D.O
ix. சர்வதேச நிதி நிறுவனம் - I.M.F
x. சர்வதேச நிதியக்கழகம் - I.F.C


சேதீஸ், சஜவாதன், கறுக்காய் தீவு, பூநகரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 4 இங்குள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி குறைந்தது 10 சொற்களையேனும் அமைக்க

## இடைவெளிகளை நிரப்புக 2



## 3 ஆங்கில சொற்களுக்குப் பொருத்தமான படத்துடன் இணைக்க

hat

box

lamp

fan







தயாரிப்பு - நூஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2011.11.23 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 339**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**


## வழி காட்டுங்கள் 1



## ஒத்தகருத்துடைய சொல்லில் கோடிடுக 5

1. அடவி (குளவி/காடு)
2. இன்பம் (களிப்பு/மிடி)
3. ஐயம் (தெளிவு/சந்தேகம்)
4. வெட்கம் (நாண்/நாணம்)

## விஜய் வாசகர் மடல்



நீ தாங்கி வரும் அனைத்து விடயங்களும் எமது பாடசாலைக் கல்விக்கு மிகவும் பயனளிக்கின்றன; பொது அறிவை வளர்க்கவும் உதவுகின்றன. 'பால் உணவுகள் எவ்வாறு தயாரிக்கப்படுகின்றன?', 'இராமாயணம்', 'தெரிந்துகொள்வோம்' போன்றவை உட்பட, அனைத்தும் பிரமாதம்.

**-எஃப்.பஸீஹா, வராகஸ்கின்ன, அக்குறனை.**

ஒவ்வொரு வாரமும் என்னை நாடி வந்து உன்னை வாசித்துப் பயன்பெற என்னை ஊக்கப்படுத்துகின்றாய். 'வாரம் ஒரு நாடு',



'விண்வெளித் தகவல்கள்', 'இராமாயணம்', 'தெரிந்துகொள்வோம்' என பல்வேறு வகையான ஆக்கங்களைத் தந்து, என் மனதில் இடம்பிடித்துவிட்டாய். புதன் தோறும் உனக்காக காத்திருக்கின்றேன். **-ஷப்னா நிஸ்தார், கெடகும்புர,லீமகஹகொடுவ.**

'கண்நோய்க்கு நிவாரணமளிக்கும் இயற்கை வைத்தியம்', 'ஹஜ்ஜுப் பெருநாள்', 'பால் உற்பத்தி', 'வாழைப் பழத்திலிருந்து மின்சாரம்', 'அதிகமாக சிதறடிக்கப்படும் நீல நிறம்' போன்ற ஆக்கங்களை விரும்பி வாசித்தேன். ஒவ்வொரு கிழமையும் வித்தியாசமான ஆக்கங்களை எமக்கு வழங்கி எம் மனதைக் கவர்ந்துவிட்டாய்.

**-இம்ரான் நஜீப், கனேவல்பொள,கெக்கிராவை.**

ஒவ்வொரு கிழமையும் 'இராமாயணம்' சித்திரத்தொடரை விரும்பி வாசிக்கின்றேன். அது எனது பாடசாலைக் கல்விக்குப் பெரும் துணைபுரிகின்றது. 'வரலாற்றிலிருந்து' பகுதி வரலாறு பாடத்துடன் தொடர்புபட்டிருப்பதால், நீ எனக்கு உற்ற தோழனாகிவிட்டாய். **-ஆர்.பிரதாப், மன்னம்பிட்டிய, பொலன்னறுவை.**

*அறிவுலகில் புதுமை படைக்கும் விஜய்யே! 'வாழைப்பழத்திலிருந்து மின்சாரம்' என்ற தலைப்பைப் பார்த்து வியந்தேன். அதனை வாசித்தபின்னர் ஏராளமான தகவல்களைப் பெற்றேன். விந்தையான, அறிவுபூர்வமான தகவல்களை வழங்குவதில் நீயே முதன்மையாளன்.*



*நீ மேலும் முன்னேற வாழ்த்துகிறேன்.* **- ந.கு.ஹுதைபிப், ஜாவா வீதி, கிண்ணியா-07.**

'சரியான முறையில் செயற்படல்', 'பால் உற்பத்தி பற்றி அறிந்துகொள்வோம்' என்பன ஏராளமான தகவல்களை வழங்கியிருந்தன. 'மாணவர்களின் கல்வியில் செல்வாக்குச் செலுத்தும் ஆசிரியர்-மாணவர் தொடர்பு' உட்பட, சிறந்த ஆலோசனைகளை வழங்கி வரும் 'கல்வி முகாமைத்துவம்' எனும் பகுதி மாணவர்களுக்கு மட்டுமன்றி, அனைவருக்கும் பயன்தரக்கூடியது. வாழ்க உன் பணி!

**-ம.புவிராஜ், ஹீரஸ்ஸகல, கண்டி.**

**இந்த இதழில் (16.11.2011) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**
**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 23.11.2011.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**




வாசகர் மடல்,
'விஜய்'
த.பெ.எண் 2037,
கொழும்பு.




## அறிவுக்கு விருந்து 336 விடைகள்

**போட்டி: 01**



**போட்டி: 02**




**போட்டி: 03**




**போட்டி: 04**

1. flood
2. ஒட்டகம்
3. தன்மை

**போட்டி: 05**

1. கற்குகை
2. ஆற்றுநீர்
3. திங்கட்கிழமை
4. பூவிதழ்

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 336 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
அமானி நவ்சாட்,
சென்.தோமஸ் கீழ் வீதி, பண்டாரவளை.

**போட்டி: 02**
எம்.இல்மா,
அப்துல் காதர் ஆலிம் மாவ., பேருவளை.

**போட்டி: 03**
ஒ.க்ரெக்டன்,
போதிராஜராம ஒழுங்கை, கொழும்பு-13.

**போட்டி: 04**
எம்.அனீஸ், உடவெல்ல, தந்துற.

**போட்டி: 05**
எஃப்.ஹுஸ்னியா, மடவளை பஸார், மடவளை.

**பாராட்டுப் பெறுவோர்:**

- ★ அக்மா நிஃமதுல்லா, மருதமுனை-05.
- ★ ஹாதிக் முஹம்மத், பொன்பரப்பி.
- ★ ம.செந்தூரன், பசறை.
- ★ எஃப்.ஷெரீன், மடாட்டுகம.
- ★ எம்.ஃபௌசின், தர்கா நகர்.
- ★ சி.மொனீகா, கொழும்பு-03.
- ★ எஃப்.ஜுஸ்லா, பலாங்கொடை.
- ★ அஹமட் ராயிஸ், வரக்காபொளை.
- ★ து.தர்ஷிகன், பருத்தித்துறை.
- ★ எம்.சமீல், பூகொடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணங்கள்

**ஓவியம் வரைவோம் - 76**

ஓவியக்கலையில் வர்ண உபயோகம் மிக முக்கியமானது. அனைத்து வகையான ஓவியக் கலைப்படைப்புகளினதும் உயிர்நாடியாகத் திகழ்வது வர்ணங்களாகும். ஓர் ஓவியம் மனதைக் கவர்வதற்கு வர்ண உபயோகம் முக்கியமானது. ஆரம்பகாலம் தொடக்கம் வர்ணம் பற்றி பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அவை கையாளப்பட்டுள்ளன. நவீன காலத்திலும் பல்வேறு ஆய்வுகளினூடாக, பலவிதமான நவீன வர்ண உபயோகங்கள் ஓவியங்களில் கையாளப்பட்டு வருவதைக் காணலாம்.



சேர் ஐசக் நியூட்டன் வர்ணங்கள் (நிறங்கள்) பற்றி ஆராய்ந்துள்ளார். இந்த வர்ணங்களது மூலமாக இருப்பது சூரியனேயாகும் என அவர் கண்டறிந்தார். அதன்படி, சூரிய ஒளியிலுள்ள ஏழு நிறங்களே உலகில் காணப்படும் எல்லாப் பொருட்களிலும் காணப்படுகின்றன. சூரியனிலுள்ள ஏழு நிறங்களையும் ஒரே நேரத்தில் காண வேண்டுமானால், வானவில்லை அவதானியுங்கள். வானவில்லில் சூரியனின் வர்ணங்களை தெளிவாகக் காணலாம். அதன்படி; சிவப்பு, நீலம், மஞ்சள், ஊதா,கருநீலம், பச்சை, செம்மஞ்சள் எனும் நிறங்களை வானவில்லில் காணலாம்.



## ஒவியங்களில் வர்ணங்களை உபயோகிக்கும் முறைகள்

1. தெளித்தல்.
2. பூசிச் சுரண்டுதல்.
3. பலவிதமான உருளைகளினால் பூசுதல்.
4. மை பூசும் உருளையினால் பூசுதல்.
5. கரண்டியால் பூசுதல் (Plan Knife).

ஆகிய முறைகளால் ஓவியங்களுக்கு வர்ணம் தீட்டப்படுகின்றது. மேற்கண்ட முறைகளில் ஓவியங்களுக்குத் தேவையானவாறு ஒரு முறையையோ அல்லது பல முறைகளையோ கையாண்டு, ஓவியத்தை அமைக்கலாம். **(தொடரும்)**

# கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



நிரோஜ் பிரசாத், எஸ்.கே.வித்., பதுளை.




ஆர்.மாதுரி, வட்டகொட த.ம.வித்., வட்டகொட

எஃப்.ருகையா, பாத்திமா பா.மு.வித்., தஸ்கர.



சுமைலா இபாசா, முஸ்லிம் ம.வித்., சம்மாந்துறை.





எஃப்.பஸ்லா, அல்-மினா மு.ம.வித்., பக்மிகொல்ல.



செ.இளங்கதிர், சாவகச்சேரி இ.ஆ.பாட.,சாவகச்சேரி.




ரி.கஸ்தூரி, கலைமகள் வித்., முள்ளியவளை.



எம்.கோகிலா, ஸ்ரீ இராமகிருஷ்ணா மத்.கல்., கலஹா.



ஏறாவூர்-03 ஐச் சேர்ந்த அன்ஸார்-றிபாயா தம்பதியரின் செல்வப் புதல்வன் அப்ரான் அஹமட், 14.11.2011 அன்று தனது பன்னிரெண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் உட்பட, உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



மஸ்கெலியாவைச் சேர்ந்த பாசிக்-ஆய்ஷா தம்பதியரின் செல்வப் புதல்வி எஃப்.ருகையா, 16.11.2011 ஆகிய இன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்:எஃப்.ருஹ்மா)

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



மகா ஊவாவைச் சேர்ந்த ஜேசுதாஸன்-மேரிசுசிலா தம்பதியரின் செல்வப் புதல்வன் ஜே.பியோ றொட்ரிகோ, 18.11.2011 அன்று தனது ஒன்பதாவது பிறந்ததினத்தைக் கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் புனித ஆரோக்கிய அன்னையின் அருளால் பல்கலையும் கற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: பி.லூட்ஸ்மேரி)



கல்லடியைச் சேர்ந்த தநுமுதாஸ்-நிஷார்ணி தம்பதியரின் செல்வப் புதல்வி த.அக்ஷயா, 22.11.2011 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர்கள் அனைவரும் செந்தூர் முருகன் அருளால் பல்கலையும் கற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



ஹிஜ்ராகமையைச் சேர்ந்த முஹமட் யூஸுப், 04.11.2011 அன்று தனது மூன்றாவது பிறந்ததினத்தைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: பாத்திமா)

## பிறந்தநாள் வாழ்த்துக்கள் குறித்து கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதிக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்புபவர்கள், குறித்த பிறந்தநாள் நிகழ்வுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அந்த வாழ்த்துக்கள் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். தாமதித்துக் கிடைப்பவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேச்சு

சிந்தனாபுரி நாட்டை சிறப்பாக ஆட்சி செய்து வந்தார் அரசர் வித்யாதரன். அவர் வேட்டையாடுவதில் மிகுந்த விருப்புடையவர்.

ஒருநாள் அரசர் வேட்டைக்குச் சென்றார். அமைச்சரும் சேவகன் ஒருவனும் அவருக்குத் துணையாகச் சென்றனர். அடர்ந்த மரங்கள் நிறைந்த அந்தக் காட்டில், அரசர் ஒரு புலியை விரட்டியபடியே சென்றார். அமைச்சரும் சேவகனும் அவரைப் பின்தொடர்ந்து ஓடினார்கள்.

புலி அதிக வேகத்துடன் காட்டுக்குள் ஓடி மறைந்தது. ஆனால், புலியை விரட்டிச் சென்ற அரசர் தன் இருப்பிடம் திரும்ப வழி தெரியாமல் விழித்தார். அரசரின் பின்னால் ஓடிவந்த அமைச்சர், சேவகன் ஆகியோரும் வழி தவறிப் போனார்கள். அவர்கள் மூவரும் அந்த அடர்ந்த காட்டில் வெவ்வேறு திசைகளில் இருந்தார்கள். அவர்கள் ஒருவரையொருவர் தேடி காட்டை சுற்றிச் சுற்றி வந்தனர்.

அந்தக் காட்டில் ஓர் ஓலைக்குடிசை இருந்தது. அதில் பார்வையற்ற ஒரு முனிவர் தவம் செய்து கொண்டிருந்தார். அரசரையும் அமைச்சரையும் தேடியபடி வந்த சேவகன், அந்தக் குடிசைக்குள் நுழைந்தான். அங்கிருந்த முனிவரைப் பார்த்து, ''ஏய் கிழவா! இந்தப் பக்கம் யாராவது வந்தார்களா?'' என்று கேட்டான்.

அப்போது முனிவரின் கண்களை உற்றுப்பார்த்த அவன், ''அட, இவன் குருடன்'' என்று கூறிவிட்டு அங்கிருந்து வெளியேறினான்.

அடுத்ததாக அமைச்சர் அந்தக் குடிசைக்கு வந்தார். முனிவரைப் பார்த்து ''ஐயா பெரியவரே, இந்தப் பக்கம் யாரேனும் வந்தார்களா?'' என்று வினா எழுப்ப,முனிவரும் ''யாரோ ஒருவர் வந்தார். இதே கேள்வியைத்தான் கேட்டார். நான் பார்க்கவில்லை என்று சொன்னதும் போய்விட்டார்'' என்று கூறினார் முனிவர்.

''மிகவும் நன்றி முனிவரே! என்று கூறி அமைச்சர் குடிசையை விட்டு வெளியேறினார். சிறிது நேரம் கழித்து மன்னர் அக்குடிசைக்கு வந்தார். ''பெரு மதிப்புக்குரிய மகா முனிவரே, வணக்கம்! வேட்டைக்கு வந்த இடத்தில் வழிதவறி விட்டேன். என்னைத்தேடி இங்கு யாராவது வந்தார்களா?'' என்று கேட்டார்.

''ஆமாம் அரசே! உங்களுடைய அமைச்சரும், சேவகனும் சிறிது நேரத்திற்கு முன் உங்களைத் தேடி வந்துவிட்டுச் சென்றார்கள்'' என்று கூறினார் முனிவர்.

''தங்கள் உதவிக்கு மிக்க நன்றி முனிவரே, அவர்கள் அருகில்தான் போய்க்கொண்டிருப்பார்கள். அவர்களை நான் சந்திக்க வேண்டும் புறப்படுகிறேன்'' என்று கூறிவிட்டு அவசர அவசரமாகக் கிளம்பினார் அரசர். சிறிது நேரத்தில் ஓரிடத்தில் அவர்கள் மூவரும் சந்தித்துக்கொண்டார்கள். முனிவரைச் சந்தித்ததைப் பற்றிக் கூறினார் மன்னர் வித்யாதரன்.

''அவர்தான் குருடர் ஆயிற்றே..! தாங்கள் அரசர், நான் அமைச்சர், இவன் சேவகன் என்பது அவருக்கு எப்படித் தெரிந்தது?'' என்று கேட்டார் அமைச்சர்.

விடையை அறிந்துகொள்வதற்காக, மூன்று பேரும் மீண்டும் முனிவரிடம் சென்றனர்.

''முனிவரே! உங்களுக்கோ கண் பார்வை இல்லை. எங்களில் அரசன், அமைச்சர், சேவகன் என்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?'' என்று கேட்டனர்.

''உங்கள் பேச்சிலிருந்தே யார் எப்படிப்பட்டவர்கள் அவர்களின் தரம் என்ன என்பதைப் புரிந்துகொண்டேன்'' என்றார் முனிவர்.

ஒருவருடைய பேச்சை வைத்தே அவர்கள் எப்படிப்பட்டவர்கள் அவர்களின் தரம் என்ன என்பதை தீர்மானிக்க முடியும் என்பதை அந்த முனிவர்மூலம் அவர்கள் மூவரும் உணர்ந்துகொண்டனர்.

# பசி

காட்டு வழியாக பெரிய கட்டுச்சோறு மூட்டையோடு வந்துகொண்டிருந்தான் தவசி. பசி எடுக்கவே, அருவியின் அருகில் உள்ள மரத்தடியில் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தான்.

அப்போது கந்தன் என்ற வழிப்போக்கன் ஒருவன் மிகுந்த பசியோடு அவன் அருகே வந்து, ''ஐயா, பசியால் உயிர் போகின்றது. எனக்கும் சிறிது உணவு தந்தால் நன்றியுடையவனாக இருப்பேன்'' என்றான்.

''என்னிடம் இருக்கும் இந்தச் சோற்று மூட்டையைத்தான் நான் எனது பயணம் முடியும்வரை வைத்து உண்ண வேண்டும். என் வீட்டுக்குப் போய்ச்சேர நான்கு நாட்கள் செல்லும். இந்தச் சோற்றை உனக்கு நான் கொடுத்தால் நான் பட்டினிதான் கிடக்க வேண்டும்'' என்று கூறி அவனை விரட்டிவிட்டான் தவசி. கந்தனும் வேறு வழியில்லாமல் அந்த இடத்தைவிட்டுச் சென்றான்.


இரண்டு நாட்கள் கழிந்தன. தவசி கொண்டு வந்த உணவு பழுதடைந்துவிட்டது. அதனுடைய துர்மணம் தாங்க முடியாமல் அதனைத் தூர எறிந்துவிட்டு, பசியோடு பயணப்பட்டான் தவசி. நான்காவது நாள் பசி மயக்கத்தால் நடக்க முடியாமல் மயங்கிக் கீழே விழுந்தான்.

அப்போது அந்த வழியாக வழிப்போக்கன் ஒருவன் நிறையப் பழங்களோடு வந்துகொண்டிந்தான். தவசி மயங்கிக் கிடப்பதைக் கண்டு, அவனுக்கு முதலுதவி செய்து அவன் மயக்கத்தை தெளிய வைத்தான். தன் கையிலிருந்த பழங்களைக் கொடுத்து, அவன் பசியைப் போக்கினான்.

இந்த உதவியைக் கண்டு வெட்கப்பட்ட தவசி, முன்னர் கந்தன் என்ற வழிப்போக்கனுக்கு தான் செய்த தீங்கை நினைத்து வருந்திப் புலம்பினான். ''நான் வரும்வழியில் அந்த வழிப்போக்கனின் பசியைப் போக்காமல் மனிதாபிமானம் இன்றி விரட்டிவிட்டேனே. என்னிடம் இருந்த உணவை, எனக்கும் பயன்படாமல், ஏனையோருக்கும் கொடுக்காமல் வீணடித்துவிட்டேனே என்று விம்மியபடி அழுதான்.

அப்போது, தவசிக்கு உதவிய அந்த வழிப்போக்கன்; ''ஐயா,பசி என்பது உலகில் இறைவனால் படைக்கப்பட்ட அனைத்து உயிர்க்கும் பொதுவானது. பசியைவிடக் கொடுமையானது உலகில் எதுவுமே இல்லை. அதனால்தான் 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்று சொல்கிறார்கள். பசித்தவன் பகைவனாக இருந்தாலும், அவனுடைய பசியைப் போக்குவதுதான் மனித இனத்தின் உயர்ந்த பண்பாடு. உணவு கிடைத்தால் காகம் கூட தன் இனத்தை அழைத்துத்தான் உண்ணும்'' என்றான் .

''உங்கள் உயர்ந்த குணத்தை உணர்ந்தேன். இனி இத்தகைய தவறை எப்போதுமே செய்ய மாட்டேன்'' என்று வணங்கி விடை பெற்றான் தவசி.



# தண்டனை

அடர்ந்த காட்டில் ஓநாய் ஒன்று பசியோடு அலைந்து கொண்டிருந்தது. எங்கு தேடியும் அதற்கு உணவு கிடைக்கவில்லை. கொளுத்தும் வெயிலில் நடந்தபடியே, ஒரு பாறையின் பக்கம் வந்தது. அந்தப் பாறைகளின் சந்தில் நாரைகள் அவற்றினது முட்டைகளை வைத்திருப்பதைப் பார்த்தது. உடனே அந்த முட்டைகளைத் திருடித் தன் பசியைப் போக்கிக்கொள்ள வேண்டும் என்று ஓநாய் நினைத்தது.

ஒன்றிரண்டு நாரைகள் அந்தப் பாறை சந்தில் இருந்ததால், அந்த நாரைகள் அனைத்தும் அந்த இடத்தைவிட்டு அகன்ற பின்னர், அவற்றின் முட்டைகளைத் திருடலாம் என்று பொறுமையுடன் காத்திருந்தது ஓநாய்.

சிறிது நேரத்தில், நாரைகள் அனைத்தும் அவ்விடத்தை விட்டகன்று அருகில் உள்ள குளத்தை நோக்கிப் பறந்தன.


இதுவே சந்தர்ப்பம் என உணர்ந்த ஓநாய் நாரைகளின் இருப்பிடத்தை நோக்கி மின்னல் வேகத்தில் பாய்ந்து ஓடியது. இதனால், அதன் கால்கள் பாறை சந்தில் சிக்கிக் கொண்டன. தன் கால்களை வெளியே எடுக்க முடியாமல், ஓநாய் ஓலமிட்டு அழுதது. இந்த சத்தத்தைக் கேட்டு நாரைகள் அனைத்தும் வேகமாக தமது இருப்பிடம் நோக்கிப் பறந்து வந்தன.

தமது இருப்பிடத்தில் காணப்பட்ட ஓநாயின் நிலைமையைப் பார்த்த நாரைகள் மிகுந்த வேதனை அடைந்து எப்படியாவது இந்த ஓநாயைக் காப்பாற்ற வேண்டும் என்று முடிவு செய்தன.

இதற்கமைய, அனைத்து நாரைகளும் ஒன்று சேர்ந்து ஆலோசித்தன. பின்னர், அவை மெதுவாக பாறைகளை தங்கள் அலகுகளால் நகர்த்தி பாறையின் சந்தில் சிக்கியிருந்த ஓநாயின் காலை விடுவிக்க முயற்சித்தன. அப்போது ஒருசில நாரைகளின் வாயில் இருந்து ரத்தம் வழிந்தது. எனினும், அவை ஓநாயைக் காப்பாற்றும் முயற்சியில் இருந்து சிறிதும் பின்வாங்காமல் ஓநாயைக் காப்பாற்றின.

தன்னைக் காப்பாற்றிய நாரைகளை நன்றிப் பெருக்குடன் வணங்கியது ஓநாய்.

''நாரைகளே, உங்களது முட்டைகளைத் திருடவே நான் இங்கு வந்தேன். ஆனால், நல்ல மனம் படைத்த உங்களுக்கு துரோகம் செய்ய வந்ததன் விளைவால், எனக்கு இந்த ஆபத்து ஏற்பட்டது. நீங்களும், பெரிய மனதாக என்னைக் காப்பாற்றி விட்டீர்கள். நல்லவர்களுக்கு துன்பம் செய்ய நினைத்தால், உடனே தண்டனை கிடைத்துவிடும் என்பதை இப்போது நான் அனுபவபூர்வமாக உணர்ந்துகொண்டேன். என்னை மன்னித்துவிடுங்கள். இனி நான் யாருக்கும், கெடுதல் செய்ய நினைக்க மாட்டேன்'' என்று கூறிய அந்த ஓநாய், அடர்ந்த கட்டுக்குள் ஓடி மறைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் ராணிக்கும் மாலாவுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**මාලා: රාණි ඔයා ගම්පහ භෞතික විද්‍යාව පන්තියට යනවාද?**
ராணி ஒயா கம்பஹ பௌதிக வித்யாவ பந்தியட யனவாத?
மாலா: **ராணி நீங்கள் கம்பஹா பௌதிகவியல் வகுப்புக்குப் போகிறீர்களா?**

**රාණි: ඔව් මාලා යන්න ඕනේ. ඔයාත් යනවාද?**
ஒவ் மாலா யன்ன ஒனே. ஒயாத் யனவாத?
ராணி: **ஆம் மாலா போக வேண்டும். நீங்களும் போகிறீர்களா?**

**මාලා: ඔව් රාණි මමත් යනවා.**
ஒவ் ராணி மமத் யனவா.
மாலா: **ஆம் ராணி நானும் போகின்றேன்.**

**රාණි: ඔයා කා එක්කද යන්නේ?**
ஒயா கா எக்கத யன்னே?
ராணி: **நீங்கள் யாரோடு போகிறீர்கள்?**

**මාලා: පළවෙනි දවසේ අම්මත් එක්ක යනවා. ඔයත් එන්න.**
பளவெனி தவசே அம்மத் எக்க யனவா. ஒயாத் என்ன.
மாலா: **முதல் நாளில் அம்மாவோடு போவேன். நீங்களும் வாருங்கள்.**

**රාණි: ඔයාලා කවදද යන්නේ?**
ஒயாலா கவதத யன்னே?
ராணி: **நீங்கள் எப்போது போகிறீர்கள்?**

**මාලා: පන්ති තියෙන්නේ සෙනසුරාදා.**
பந்தி தியென்னே செனசுராதா.
மாலா: **சனிக்கிழமைதான் வகுப்பு நடைபெறும்.**

**රාණි: ඔයාලා කීයටද යන්නේ?**
ஒயாலா கீயடத யன்னே?
ராணி: **நீங்கள் எத்தனை மணிக்குப் போகிறீர்கள்?**

**මාලා: උදේ හතට විතර යන්න ඕනේ.**
உதே ஹதட விதற யன்ன ஒனே.
மாலா: **காலை ஏழு மணியளவில் போக வேண்டும்.**

**රාණි: එහෙනම් මම හතට බස් නැවතුමට එන්නම්.**
எஹெனம் மம ஹதட பஸ் நெவதுமட்ட என்னம்.
ராணி: **அப்படியானால் நான் ஏழு மணிக்கு பஸ் நிலையத்திற்கு வருகிறேன்.**

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. பௌதிகவியல் வகுப்புக்குப் போகிறீர்களா?
........................................................................

ii. முதல் நாளில் அம்மாவுடன் போவேன்.
........................................................................

iii. சனிக்கிழமைதான் வகுப்பு நடைபெறும்.
........................................................................






'Because' எனும் இணைக்கும் சொல்லைக் (Joining Word) கையாண்டு ஒன்றிணைக்கப்படுகின்ற கலப்பு வாக்கியங்களை (Complex Sentence) மேலும் இங்கே பயில்வோம். இவை, காரணங்களை (Reasons) தெரிவிக்கும் கலப்பு வாக்கியங்கள் என இலக்கண ரீதியாகக் கூறப்படுவதுண்டு.

(அ) எங்களால் அந்த வேலையை உரிய நேரத்தில் ஆரம்பிக்க முடியவில்லை.
We couldn't start the work on time.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(ஆ) நாங்கள் தாமதம் ஆகினோம்.
We were late.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(இ) நாங்கள் தாமதம் ஆகியதால், எங்களால் அந்த வேலையை உரிய நேரத்தில் ஆரம்பிக்க முடியவில்லை.
We couldn't start the work on time because we were late.

(ஈ) நான் உனது வார்த்தையை நம்புகின்றேன்.
I trust your word
(தனி வாக்கியம் -Simple Sentence)

(உ) நீ மிகவும் நேர்மையானவன் ஆவாய்.
You are very honest.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(ஊ) நீ மிகவும் நேர்மையானவன் என்பதால், நான் உனது வார்த்தையை நம்புகின்றேன்.
I trust your word because you are very honest.

(எ) அந்தத் திருடன் அப்பால் ஓடினான்.
The thief ran away.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(ஏ) அவன் பொலிஸாரைக் கண்டான்.
He saw the policemen.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(ஐ) அந்தத் திருடன் பொலிஸாரைக் கண்டதால், அப்பால் ஓடினான்.
The thief ran away because he saw the policemen.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

(அ) அவள் அந்தப் புத்தகத்தை வாங்கவில்லை.
She didn't buy that book.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(ஆ) அவள் பணத்தைக் கொண்டிருக்கவில்லை.
She didn't have money.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(இ) அவளிடம் பணம் இல்லாததால், அவள் அந்தப் புத்தகத்தை வாங்கவில்லை.
She didn't buy that book because she didn't have money.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

(ஈ) மேரியால் அந்த வைபவத்துக்கு போக முடியவில்லை
Mary couldn't go to that function.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(உ) அவள் விலையுயர்ந்த ஆடைகளைக் கொண்டிருக்கவில்லை.
She didn't have expensive clothes.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(ஊ) மேரி விலையுயர்ந்த ஆடைகளைக் கொண்டிருக்கவில்லை, ஆதலால் அந்த வைபவத்துக்கு அவளால் போக முடியவில்லை.
Mary couldn't go to that function because she didn't have expensive clothes.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய நாடுகளின் கடனைப் பெறுவதற்கு கிரேக்கம் சம்மதம்



ஐரோப்பிய நாடுகள் வழங்க முன்வந்துள்ள நிதியுதவியை பெற்றுக்கொள்வதற்கு கிரேக்க நாடு சம்மதம் தெரிவித்துள்ளது. கிரேக்கம் நிதி நெருக்கடியில் பாதிக்கப்பட்டிருப்பதனால் அந்நாட்டிற்கு உதவும் பொருட்டு ஐரோப்பிய நாடுகள் 13 ஆயிரம் கோடி யூரோக்களை கடனுதவியாக வழங்க முன்வந்திருந்தது. இந்த உதவியை ஏற்பதா? இல்லையா? என்பது குறித்து தீர்மானிப்ப தற்கு, கிரேக்க நாட்டின் நாடாளுமன்றத்தின் அனுமதியைக் கோரும் நோக்கில் அந்நாட்டின் பிரதமர் ஜோர்ஜ் பப்பான்டி நாடாளுமன்றத்தைக் கூட்டியிருந்தார். நாடாளுமன்ற விவா தத்தை யடுத்து, இத்திட்டத்தை ஏற்பதற்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

ஏழு மணித்தியாலங்களாக, தொடர்ந்த விவாதத்தின் பின்னரே, நாடாளுமன்றத்தில் இதற்கு ஒப்புதல் கிடைக்கப்பெற்றது. இதன்படி, கிரேக்க வங்கிகள் எதிர்நோக்கியுள்ள நஷ்டத்தில் அரைப்பங்கினை ஐரோப்பிய நாடுகள் ஏற்கும்பொருட்டு கிரேக்கத்திற்கு 14,000 கோடி டொலர்களை கடனாக வழங்கவுள்ளன.

இருப்பினும், ஐரோப்பிய நாடுகளின் கடனைப் பெறுவதற்கு முயற்சித்தமையின் காரணமாக பிரதமர் பப்பான் டி மீது மேற்கொள்ளப் பட்ட அழுத்தத்தினால் அவர் பதவியிலிருந்து விலக வேண்டிய நிலைக்கு ஆளாகியமை பிந்திய செய்தியாகும்




## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# பிள்ளைகளின் கல்விக்காக நாட்டிலிருந்து வெளியேறும் பணக்கார சீனர்கள்



சீனாவைச் சேர்ந்த தனவந்தர்கள் தமது நாட்டிலிருந்து வெளியேறி வேறு நாடுகளில் குடிபுக விரும்புவதாக ஆய்வின்மூலம் தெரிய வந்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சீனாவில் வசதி வாய்ப்புக்கள் உயர்ந்த தரத்தில் உள்ளபோதிலும் இவர்கள் சீனாவில் வசிக்க விரும்பாமல் வெளிநாடுகளை நாடிச் செல்கின்றமைக்கு தமது பிள்ளைகளுக்கான கல்வித் தேவையே முக்கிய காரணம் என்று கூறப்படுகின்றது. குறிப்பாக, நாட்டிலுள்ள பணக்காரர்களில் அறுபது வீதத்திற்கும் அதிகமானவர்கள் இவ்வாறு வெளிநாடுகளில் குடியேற விரும்புவது தெரியவந்துள்ளதுடன், இதில் கணிசமானவர்கள் அதற்கான விண்ணப்பங்களையும் அனுப்பி வைத்துள்ளனர்.

மேலும், சில பணக்காரர்கள் தாம் வெளிநாடுகளிலேயே பெருமளவு முதலீடுகளை செய்திருப்பதனால் அந்நாடுகளில் குடியேற விரும்புகின்றனராம். கடந்த மே மாதத்திலிருந்து, செப்டெம்பர் மாதம் வரையில் சீனாவின் 18 நகரங்களில் நடுத்தர வயதினரிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலமே இந்த உண்மை தெரியவந்துள்ளது.

குறிப்பாக அவுஸ்திரேலியா, கெனடா ஆகிய நாடுகளிலேயே இந்த சீனர்கள் அதிகம் குடியேற விரும்புகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில்:

# வலிநீக்கி மாத்திரைகளால் மரணங்கள் அதிகரிப்பு

அமெரிக்காவில் ஏராளமானோர் வலிநீக்கி மாத்திரைகளை அநாவசியமான முறையில் பயன்படுத்தி வருகின்றமையினால் அதிக எண்ணிக்கையானோர் மரணமடைந்து வருவதாக அந்நாட்டு அரசாங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, அண்மைக்காலமாகவே இவ்வாறு ஓர் அடிமைப்பழக்கமாக வலிநீக்கி மாத்திரைகளைப் பயன்படுத்துவது அங்கு அதிகரித்து வருவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. உடல் வலிகளை உணராமல் இருப்பதற்காக, மருத்துவர்களால் சிபாரிசு செய்யப்படுகின்ற இந்த தற்காலிக நிவாரண மாத்திரைக்கு அடிமையாகின்றவர்கள் காலப்போக்கில் இவற்றை அளவிற்கு அதிகமாகப் பயன்படுத்தத் தொடங்கிவிடுவதன் விளைவாகவே, அவர்கள் மரணத்தை தழுவும் நிலை காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது.



அந்தவகையில், நாளொன்றுக்கு சராசரியாக 40 பேர் வரை வலி நீக்கி மருந்துகளால் அமெரிக்காவில் மரணமடைகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும், பலர் எந்தவொரு மருத்துவக் காரணமுமின்றி வலி நீக்கி மாத்திரைகளைப் பயன்படுத்தி வருகின்றனராம்.

# தெரிந்து கொள்வோம்



* இலங்கையின் தேசிய கொடியில் வாளேந்திய சிங்கம் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். அவ்வாறே, ஐ. அமெரிக்காவின் தேசிய கொடியில் நட்சத்திரங்கள் காணப்படுகின்றன. அவை எதனைக் குறிக்கின்றன?

ஐக்கிய அமெரிக்காவின் 50 சமஷ்டி மாநிலங்களை குறிக்கின்றது.



* சிறுவர் பாதுகாப்புச் சட்டப்படி, எந்த வயது வரை கட்டாயக் கல்வி அமுலாக்கப்படுகின்றது?

5-14 வயது வரை கட்டாயக் கல்விக்குரிய வயதாகும். 9 ஆம் வகுப்புவரை கல்வி கற்க வேண்டும். இதற்கிடையில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது குற்றமாகும்.



* ஆபிரிக்க கண்டத்திலிருந்து ஐ.நா. செயலாளர் நாயகமாக பதவி வகித்தவர்கள் இருவர். அதில் ஒருவர் கானா நாட்டைச் சேர்ந்த "கொபி அனான்" ஆவார். மற்றயவர் பெயர் என்ன?

எகிப்து நாட்டைச் சேர்ந்த பூட்ரஸ் பூட்ரஸ் காலி



* தேவ நம்பிய திஸ்ஸ மன்னனின் காலத்தில் மகிந்த தேரரால் பௌத்த சமயம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது. அவ்வாறே, புனித மரமான வெள்ளரசு மரக் கிளையைக் கொண்டு வந்தவர் யார்?

சங்கமித்தாவும் நந்தகுமாரனும்



* உலகில் பெரிய தீவு கிறீன்லாந்து ஆகும். இரண்டாவது பெரிய தீவு எது?

நிங்கினி - பசுபிக் சமுத்திரத்திலுள்ளது



* விண்வெளிக்கு சென்ற முதல் மனிதர் யூரிககாரின் ஆவார். அந்தவகையில், விண்வெளிக்குச் சென்ற முதலாவது மிருகம் எது? அதன் பெயர் என்ன?

நாய்-லைகா



* இராமாயணத்தை வடமொழியிலும் தமிழிலும் எழுதியவர்கள் யார்?

வடமொழியில்- வால்மீகி, வசிட்டர்.
தமிழ் மொழியில் - கம்பர்



* உலகில் அதி கூடுதலான இரசிகர்களைக்கொண்ட ஜனரஞ்சகமான விளையாட்டு கால்பந்தாட்டமாகும். சர்வதேச உதைபந்தாட்டமொன்று எவ்வளவு நேரம் நடைபெறும்?

90 நிமிடம்



* சினிமாத்துறையில் உலகில் மிக உயர் விருது 'ஒஸ்கார் விருதாகும்" இதுவரை ஆகக்கூடிய தடவை ஒஸ்கர் விருதைப் பெற்றவர் யார்?

வோல்டர் டிஸ்னி. 35 தடவைகள் ஒஸ்கர் விருதைப் பெற்றுள்ளார்



* தகழி சிவசங்கரப் பிள்ளையால் எழுதப்பட்ட நூல் 'செம்மீன்' என்பதாகும். உலகில் மிகப்பெரிய நாவலான 'போரும் சமாதானமும்' என்ற நூலை எழுதியவர் யார்?

லியோ டால்ஸ்டாய்



* 'இன்டர்போல்' என்பது சர்வதேச பொலிஸ் அமைப்பாகும். அங்கத்துவ நாடுகளுக்கிடையே குற்றவியல் சம்பந்தப்பட்ட விடயங்களைக் கண்காணித்தல், பரஸ்பரம் உதவுதல் இதன் பணியாகும். இதன் தலைமையகம் எங்குள்ளது? இது எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

பெரிஸ்
(1914 இல் ஆரம்பிக்கப்பட்டது).

-தொகுப்பு: உடுவை பரந்தாமன்

## அற்லஸ் கேள்வி - 334

**கேள்வி:** சீன தனவந்தர்கள் அதிகமாக குடியேற விரும்புகின்ற இரண்டு நாடுகள் எவை?

சரியான விடை.................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 334,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

போட்டி இல - 332 இன் சரியான விடை: 2003 ஆம் ஆண்டு

பரிசு பெறுவோர்

எஃப்.ஜுஹிசபா,
ஏ.ஆர்.எம்.மில்.வீதி, அட்டாளைச்சேனை-01.

ஆர்.ஜெனிங்ஸ் டிவின்ஸ்டன்,
சிவாநந்தா வீதி, கொழும்பு-13.

குணசீலன் கிருத்திகன்,
திருநாவற்குளம், வவுனியா.

குறிப்பு: கடந்தவாரம் போட்டி இல -331 இன் விடை பிழையாகப் பிரசுரமாகியிருந்தது. அதன் சரியான விடை 1929 ஆம் ஆண்டு ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூதாட்ட ஆதாரங்கள் எவ்வாறு சேகரிக்கப்பட்டன?





***பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டமை எவ்வாறு ஆதாரத்துடன் உறுதிசெய்யப்பட்டது தெரியுமா?***

அதாவது, 'நியூஸ் ஒஃப் தி வேர்ல்ட்' என்ற ஊடக நிறுவனமொன்றே சூதாட்ட நிகழ்வைக் கண்டறிவதில் பிரதான பங்கினை ஆற்றியுள்ளது.

குறித்த நிறுவனத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் தன்னை ஒரு கோடீஸ்வர வர்த்தகராக வேடமிட்டு சூதாட்டத் தரகர் மஷர் மஜீத்துடன் தொடர்புகளை மேற்கொண்டார், தான் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள போட்டிகளில் சூதாட்டத்தை நடத்துவதற்கு விரும்புவதாகவும் அதற்கு பாகிஸ்தான் வீரர்களுடன் தொடர்பை ஏற்படுத்தித் தருமாறும் கேட்டுக்கொண்டார். இதன்போது, அவர் சூதாட்டத் தரகருடன் நடத்திய பேச்சுக்கள் யாவும் ரகசியமாக வீடியோ கெமராவில் ஒளிப்பதிவு செய்யப்பட்டது.

சூதாட்டத் தரகர் அவ்வாறே, பாகிஸ்தான் வீரர்களான சல்மன் பட், அமிர், ஆஷிப் ஆகியோரை குறித்த இடமொன்றிற்கு அழைத்து வந்து 'மெட்ச் ஃபிக்சிங்' செய்வது தொடர்பான பேச்சுக்களை வர்த்தகர் வேடந்தரித்த ஊடகவியலாளருடன் பேசச் செய்து பேரம் பேசலை மேற்கொண்டார். இந்தக் காட்சிகளும் மிக ரகசியமாக வீடியோவில் பதியப்பட்டது.

இந்தப் பேச்சுக்களின்போதே, குறித்த டெஸ்ட் போட்டியின்போது 'நோ போள்' (Noball) போடுவதாக மேற்படி வீரர்கள் இணக்கம் தெரிவித்திருந்தனர். எதிர்பார்க்கப்பட்டது போலவே, அந்தப் போட்டியில் அவர்கள் 'நோ போல்' பந்துகளை வீசினர். எனவே, ரகசியமாக ஒளிப்பதிவு செய்யப்பட்ட காட்சிகளையும், போட்டியின்போது நோ போள்' வீசும் காட்சியையும் பகிரங்கப்படுத்திய குறித்த ஊடக நிறுவனம் இந்த விடயத்தை சர்வதேச பார்வைக்கு உட்படுத்தியது. எனவே, இவற்றை ஆதாரமாகக் கொண்டே இது விடயமான வழக்கில் தீர்ப்பும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் இரவுநேர மோட்டார் வாகன ஓட்டப் போட்டிகள்






மோட்டார் வாகன மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டப் போட்டிகளை நேரில் கண்டுகளிப்பதற்கான வாய்ப்பு இலங்கை ரசிகர்களுக்கும் கிடைக்கவுள்ளது. அதிலும் குறிப்பாக, இரவு நேர போட்டிகளாக இவை நடைபெறவுள்ளமையே இதன் சிறப்பம்சமாகும்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி இரவு 7 மணிக்கு கொழும்பு காலிமுகத்திடல் மற்றும் கொழும்பு கோட்டை பிரதேசத்தை சுற்றி வரவுள்ள வட்டாரத்திலும் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

இலங்கை ஓட்டோ மோபைல் விளையாட்டுச் சம்மேளனமும் இலங்கை மோட்டார் வாகன சம்மேளனமும் இணைந்து நடத்துகின்ற இந்த போட்டிகளில் இலங்கைப் போட்டியாளர்கள் மட்டுமன்றி வெளிநாட்டுப் போட்டியாளர்களும் கலந்து கொள்வதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எஸ்டன் மார்டின், ஃபோர்ட் லேஸர், நிஷான் மாச், ஒஸ்டின் மினி போன்ற உலகப் பிரசித்தி பெற்ற வாகனங்கள் பல இந்தப் போட்டியில் ஈடுபடுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதுமட்டுமன்றி போட்டிகளுக்கென்றே வடிவமைக்கப்படுகின்ற 'ஃபொமியுலா' வாகனங்களும் இந்தப் போட்டியில் இடம்பெறவுள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

# வெளிநாட்டில் இலங்கையர் பெற்ற 500 ஓட்டங்கள்

இலங்கை கிரிக்கெட் அணி வெளிநாடொன்றில் மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் கலந்து கொண்டதில் இலங்கை அணியின் சார்பாக, அதிகூடிய ஓட்டங்களான 500 ஓட்டங்களைப் பெற்றவர் என்ற பெருமையை இலங்கை அணியின் குமார் சங்கக்கார பெற்றுள்ளார்.

டுபாயில் இலங்கை-பாகிஸ்தான் அணிகளுக்கிடையே நடைபெற்ற மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் மூன்றாவது போட்டியின்போது, தனது 36 ஆவது ஓட்டத்தைப் பெற்ற போதே சங்கக்கார இந்த 500 ஓட்ட இலக்கை அடைந்தார்.

இதற்கு முன்னர் முன்னாள் டெஸ்ட் வீரர் அரவிந்த டி சில்வா 1991 ஆம் ஆண்டில் நியூஸிலாந்துடனான போட்டித் தொடரின்போது, பெற்ற ஓட்டங்களுடன் வெளிநாடொன்றில் இலங்கை வீரர் மொத்தமாகப் பெற்ற ஓட்டங்களாக 493 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். அந்த சாதனையையே சங்கக்கார தற்போது முறியடித்துள்ளார்.

## சிறந்த தடகள வீரர் இறுதிப் பட்டியலில் போல்ட்




2011 ஆம் ஆண்டின் சிறந்த தடகள வீரர்களின் தெரிவுப் பட்டியலில் ஜெமெய்க்கா நாட்டின் உசேன் போல்ட் இடம்பெற்றுள்ளார்.

வருடம்தோறும் வழங்கப்பட்டு வருகின்ற இந்த விருதுப் பட்டியலில் இந்த ஆண்டுக்கான இறுதி மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த மூன்று பேரில் ஜெமெய்க்காவின் உசேன் போல்ட், அதேநாட்டின் யொசன் பிளேக், கென்யாவின் டேவிட் நடாஷா ஆகியோர் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச பெட்மின்டனில் தங்கம் வென்ற இலங்கையர்



தென் அமெரிக்காவின் 'பூவர்டோ' என்ற பிராந்தியத்தில் நடைபெற்ற 'பூவர்டோ ரிக்கோ' சர்வதேச பெட்மின்டன் போட்டியில் ஆடவர்க்கான ஒற்றையர் பிரிவில் இலங்கையைச் சேர்ந்த திலுக்க கருணாரத்ன தங்கப் பதக்கத்தை வெற்றியீட்டியுள்ளார்.


இந்தப் போட்டிகள் சர்வதேச பெட்மின்டன் சம்மேளனத்தின் கால அட்டவணைக்குள் அடங்கும் ஒரு போட்டியாகும். இலங்கை இப்போட்டியில் தங்கப் பதக்கத்தை வெற்றியீட்டியமை இதுவே முதல் தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆடவர்க்கான மேற்படி ஒற்றையர் இறுதிப் போட்டியில் ஒஸ்ட்ரியாவின் வீரர் மிச்செல் லொன்ஸ்டினோயை இரண்டு சுற்றிலும் 21-18, 21-15 என்ற கணக்கில் தோற்கடித்தே இலங்கையின் நிலுக்க செம்பியன் கிண்ணத்தை வெற்றியீட்டியுள்ளார்.

அரையிறுதிப் போட்டியில் ஜெமெய்க்காவின் கிரேத் ஹென்ரியை 21-11, 21-14 என்ற கணக்கில் தோற்கடித்தமையின் மூலமே நிலுக்க கருணாரத்ன இறுதிப் போட்டிக்கு தெரிவாகியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2013 இல் ஏற்படும் சூரிய புயலால் பூமிக்கு ஆபத்து...?








2013 ஆம் ஆண்டில் ஏற்படவுள்ள சூரிய புயலால் பூமிக்கு ஆபத்து நேரிட வாய்ப்பு உள்ளதாக அமெரிக்க நாட்டின் தேசிய கடல் மற்றும் வளிமண்டல அமைப்பின் உதவி செயலாளரான கெத்ரின் சுல்லிவன் தெரிவித்துள்ளார். 11 வருட இயற்கை சுழற்சியின் பயனாக சூரியன் அதிக பலம் பெறவுள்ள குறித்த 2013 ஆண்டிலேயே இந்நிகழ்வு நடைபெற இருப்பதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

சூரியனில் ஏற்படும் பாரிய வெடிப்பினாலேயே, சூரிய புயல் ஏற்படுகிறது. இதன்போது எக்ஸ் கதிர்கள் மற்றும் புற ஊதாக் கதிர்கள் ஆகியவை பெருமளவில் வெளிப்படும். இவை பூமியின் காந்தப் புலத்தினை அதிகமாகப் பாதிக்கும் வலிமை கொண்டது. எனவே, இதன்போது பூமியில் உள்ள கணினிகளின் செயற்பாடுகளில் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பாதிப்பு ஏற்படும். குறிப்பாக, வானொலி அலைவரிசைகளிலும் செயற்கைக்கோள் தகவல் தொடர்புகள் மற்றும் வரைபட வழிகாட்டி ஆகியவற்றிலும் பாதிப்பு ஏற்படும் என்றும் கூறப்படுகின்றது.

1972 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சூரிய புயலால் அமெரிக்காவின் இல்லினொய்ஸ் மாநிலத்தில் தகவல் தொடர்பில் பாதிப்பு மற்றும் 1989 ஆம் ஆண்டில் கெனடாவின் கியூபெக் மாகாணத்தில் மின்சார பரிமாற்ற பணிகளில் பாதிப்புக்கள் ஏற்பட்டன. முதன்முதலாக 1859 ஆம் ஆண்டு இங்கிலாந்து வானியலாளர் ரிச்சர்ட் கேரிங்டன் என்பவரே சூரிய புயலைக் கண்டறிந்தார்.

## உபகோள் இல்லாவிட்டாலும் கிரகங்களுக்குப் பாதிப்பில்லை

பூமி அதன் அச்சில் சுழலும் நிலைப்பாடு குறித்து அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் இதாஹோ பல்கலைக்கழகத்தில் ஆய்வொன்றை மேற்கொண்டனர்.

இந்த ஆய்வினை அடுத்து, பூமியின் உபகோள் ஆக்க் கருதப்படும் சந்திரன் இல்லாத நிலையிலும்கூட, பூமியில் உயிரினங்களின் வாழ்க்கை முறையில் எந்தவிதத்திலும் பாதிப்பு ஏற்படாது எனத் தெரியவந்துள்ளது. மேலும், ஏனைய கிரகங்களுக்கும் அவற்றின் உபகோள்கள் இல்லாத நிலையிலும் அவற்றின் தன்மையிலோ, அமைப்பிலோ எந்தவிதமான பாதிப்புகளும் மாற்றங்களும் ஏற்படாது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

உபகோள் இல்லையெனில், பூமி தன் அச்சிலிருந்து சற்று விலக நேரிடும் என்றும் அதனால் சூரிய ஒளி துருவப் பகுதிகளில் விழுந்து பருவ காலங்களில் பாரிய மாற்றங்கள் ஏற்படும் என்றும் இதனால் பூமியில் உள்ள உயிரினங்களின் வாழ்க்கை முறைகள் பாதிக்கப்படும் என்றும் இதுவரை தெரிவிக்கப்பட்டு வந்தது.

அவ்வாறே, உபகோள்கள் இல்லாவிட்டால் ஏனைய கிரகங்களிலும் பாதிப்புகள் ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டு வந்தது. எனினும், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வினூடாக, பூமி அதன் உபகோளான சந்திரன் இல்லாவிட்டாலும் அதன் அச்சில் சீராக பயணிக்கும் என்றும் அவ்வாறே, ஏனைய கிரகங்களும் அவற்றுக்குரிய உபகோள் இல்லாத நிலையிலும் அவற்றின் அச்சில் சீராகப் பயணிக்கும் என்றும் தெரியவந்துள்ளது.









## 'Dragon' விண்கலம் டிசம்பரில் ISS நோக்கிச் செல்லவுள்ளது







விண்வெளியில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற, சர்வதேச விண்வெளி நிலையத்திற்குத் (ISS - International Space Station) தேவையான பொருட்களை எடுத்துச் செல்லும் பணியில் முதன்முதலாக தனியார் நிறுவனம் ஒன்றிற்குச் சொந்தமான விண்கலம் ஒன்று ஈடுபடுத்தப்படவுள்ளது. அந்த விண்கலத்தின் பெயர் 'Dragon' (டிரகன்) என்பதாகும்.

Space Exploration Technologies எனும் 'ஸ்பேஸ்X' (SpaceX) நிறுவனத்திற்குச் சொந்தமான இந்த Dragon விண்கலத்தை எதிர்வரும் டிசம்பர் மாதம் 19 ஆம் திகதியளவில் விண்ணில் செலுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாக 'ஸ்பேஸ்X' நிறுவனத்தின் தொடர்பாடல் பிரிவின் உப தலைவர் பொபி ப்ளொக்ஸ் தெரிவித்துள்ளார். எனினும், நாஸா நிறுவனம் அறிவிக்கும் திகதியில்தான் இந்த விண்கலத்தின் பயணத் திகதி தீர்மானிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


எவ்வாறாயினும், இம்மாதம் 21 ஆம் திகதியளவில் இதன் பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அதற்காக, ஃப்ளோரிடாவிலுள்ள கேப் கெனவரல் விண் ஏவுதளத்திற்கு கடந்த 20 ஆம் திகதி Dragon விண்கலம் கொண்டுவரப்பட்டது. இங்கிருந்தே அது விண்வெளிக்கு ஏவப்பட்வும் உள்ளது.

சர்வதேச விண்வெளி நிலையத்தின் நிர்மாணப்பணிகளில் நாஸாவின் பங்களிப்பு இந்த ஆண்டு நடுப்பகுதியளவில் நிறைவடைந்தது. நாஸாவின் விண்ணோடங்களும் விண்வெளிப் பயணங்களிலிருந்து ஓய்வுபெற்றுவிட்டன. இந்நிலையில், சர்வதேச விண்வெளி நிலையத்தின் நிர்மாணப்பணிகளுக்குத் தேவையான பொருட்களைக் கொண்டுசெல்லும் பணிகளில் ரஷ்யாவின் சோயுஸ் விண்கலங்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதோடு, அதேவேளை, அமெரிக்காவின் 'ஸ்பேஸ்X' தனியார் நிறுவனத்திற்கும் அந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது. ஸ்பேஸ்X நிறுவனமானது, ஏற்கனவே இரண்டு Folcon 9 ரக ரொக்கெட்களை விண்ணில் ஏவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமுடிக்கு 'ஜெல்' பயன்படுத்திய பழங்கால எகிப்தியர்கள்





இங்கிலாந்து நாட்டிலுள்ள மேன்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் தொல்லியல் துறை நிபுணரான நடாலி மெக்ரிஷ் என்பவரது தலைமையில் எகிப்து நாட்டின் 'மம்மிகள்' பற்றிய ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, அவர்களது ஆய்விற்காக, எடுத்துக்கொள்ளப்பட்ட 18 மம்மிகளில் பெரும்பாலானவை கிரேக்கம் மற்றும் ரோமானிய காலத்தின்படி 2,300 வருடங்களுக்கு முற்பட்டவை. அவற்றில் மிகப் பழைமையான மம்மியின் வயது 3,500 ஆகும். இந்த மம்மிகளில் ஆண்-பெண் என 4 வயது முதல் 58 வயது வரையிலானோர் அடங்குவர்.

நுணுக்குக்காட்டி முறையில் ஒளி மற்றும் மின்னணுக்களைப் பயன்படுத்தி ஆராய்ந்ததில் 9 மம்மிக்களின் தலைமுடியில் கொழுப்பு போன்றதொரு பதார்த்தம் பூசப்பட்டு இருந்தது. தொடர் ஆய்வின்படி, அது 'ஸ்டியரிக்' வகையைச் சேர்ந்த கொழுப்பு அமிலங்கள் என தெரிய வந்துள்ளது. ஜெல் வடிவில் பயன்படுத்தப்பட்ட அவை எதிலிருந்து எடுக்கப்பட்டவை என குறிப்பாகத் தெரியவில்லை. எனினும், எகிப்து நாட்டவர்கள் பழங்காலத்திலிருந்தே தங்களது தலைமுடியினை அழகாகப் பராமரித்து வந்துள்ளனர் என்பதுடன், மம்மிகள் உருவாக்கத்திலும் அந்த நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது என்பதும் ஆய்வினூடாகத் தெரியவந்துள்ளது.

"என்னை அழைத்தீர்களாமே" என்று கூறிக் கொண்டே, சிங்கராஜா முன் வந்து நின்றது ஓநாய்.

"உன்னைக் கொன்று தின்னவே அழைத்தேன்" என்றது சிங்கம்.

"நான் இன்றுவரை ஒரு குற்றமும் செய்யவில்லையே ராஜா" என்று கூறி ஓநாய் அச்சத்தால் நடுங்கியது.



## தனக்கு வந்தால்தான் தர்மம்

"இனிமேல் செய்வாய் அல்லவா? அதனால்தான் உன்னைக் கொல்லப்போகிறேன்" என்றது சிங்கம்.

"ஐயோ, மகாராஜா இனிமேலும் செய்யமாட்டேன்" என்று சத்தியம் செய்தது ஓநாய்.

"உன் பெற்றோர்.... உடன் பிறந்தோர் குற்றம் செய்தாலும் செய்வார்கள். அதனால், உன்னைக் கொல்லப்போகின்றேன்" என்றது சிங்கம்.

"எனக்கு யாருமே இல்லையே" என்றது ஓநாய்.

"அடுத்த ஜென்மத்தில் நீயும் குற்றம் செய்யலாம், உன் பெற்றோர்..... இனத்தார் செய்யலாம்: அதனால், கொன்றே தீருவேன்" என்றது சிங்கம்.

"இது அநியாயம்" என்று ஓநாய் கதறி அழுதது.

"நீர் அருந்த வந்த ஆட்டுக்குட்டியை நேற்று ஆற்றங்கரையில் கொன்றாயே.... அதுமட்டும் நியாயமா?" என்று சிங்கம் கேட்டபோதுதான் ஓநாய்க்குத் தான் செய்த குற்றம் புரிந்தது.

"சிங்கராஜா, எனக்குப் புத்திவந்துவிட்டது. இனிமேல் இவ்வாறு நடந்துகொள்ள மாட்டேன்" என்று கூறி மீண்டும் கதறி அழுதது ஓநாய்.

சிங்கம் ஓநாயை மன்னித்து அனுப்பியது.

## சாதனையாளர்: உடலின் சமச்சீர் தன்மை

இடது காதில் உருவாகும் திரவ சமனிலைதான் உடலின் சமச்சீர் தன்மைக்கு காரணம் எனும் ஒரு வியத்தகு கண்டுபிடிப்பை ரொபர்ட் பரனி உலகிற்கு முதன்முதலாக வெளிப்படுத்தினார். அதற்கான மருத்துவ சாதனையாளராக 1914 ஆம் ஆண்டு நொபெல் பரிசினையும் இவர் பெற்றுக்கொண்டார். காது, கண், மூளை சார்ந்த கட்டமைப்பின் சமச்சீர் தன்மையே சுற்றும் பூமியின் வீச்சால் நாம் நிலைகுலையாமல் இருக்கச் செய்வதாக தமது ஆராய்வுகளின்மூலம் விளக்கினார். மேலும், இந்தக் கட்டமைப்பு உடலுக்குள் நிலைகுலையும் போது, அதற்குத் தேவையான மருந்துகளைக் கண்டறிந்து வழங்கிய வித்தகரும் இவரே.



(கி.பி. 1876-1936)

ரொபர்ட் பரனி 1876 ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி ஒஸ்ட்ரியா நாட்டில் பிறந்தார். இளமையில் கல்வியில் பெரிதும் அக்கறை செலுத்திய பரனி மருத்துவத் துறையை தொழிலாக தெரிவுசெய்து அதில் பல ஆய்வுகளையும் மேற்கொண்டார். தமது உடல் சமச்சீர் மண்டலம் பாதிக்கப்பட்டு மூன்று நாட்கள் பெரிதும் அவதியுற்றமையால் இதற்கான மருத்துவத் தீர்வினை கண்டறிய இவர் முனைந்தார்.

பூமி சுற்றிக்கொண்டே இருந்தாலும் நாமும் சுற்றுவதுபோல் உணர்வதில்லை. காரணம் இந்த வகையான சமச்சீர் உணர்வினை நமக்கு அளிக்கவே ஓர் உணர்வு மண்டலம் இருக்கிறது. காதுகளில் ஊறும் ஒருவித திரவத்தின் சமச்சீர் தன்மை வாயிலாக நாம் இந்த சமநிலையை உணர்ந்தபடி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த திரவ சமனிலை தடைப்படும்போது, சொல்லொணா குழப்பமும், மயக்கமும் உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் உண்டாகின்றன.

இத்தகைய நிலையைத் தீர்ப்பதற்கு

## ரொபர்ட் பரனி

நோயாளி ஒருவர்மீது பரனி மேற்கொண்ட ஆய்வில் முதற்படியாக அத்திரவத்தை மிகக் குளிர்ச்சியாக நோயாளியின் உடலில் ஏற்றினார். இதன் காரணமாக, அந்த நோயாளி ஒரு திசையில் தலைச்சுற்றி ஆடிப்போனார். பின்னர் அந்தத் திரவத்தை கொதிக்க வைத்து ஊசியில் ஏற்றினார். அப்போது மேற்சொன்ன திசைக்கு எதிர்த்திசையில் தலைச்சுற்றி அந்த நோயாளி திண்டாடினார். இதிலிருந்து காதில் உள்ள அந்தத் திரவமே தலைச்சுற்றலுக்குக் காரணம் என்பது உறுதியாகியது. மனித உடலானது சுற்றும் பூமியின் தாக்கத்தால் நிலை தடுமாறாமல் இருப்பதற்கான காரணம் இந்த ஆய்வின் வாயிலாக உலகிற்கு அறிவிக்கப்பட்டது. பின்னர் 'கலோரி ஆய்வுகள்' என பல தொடர் ஆய்வுகளை நடத்தி உலகிற்கு வெளிப்படுத்திய ரொபர்ட் பரனி 1936 ஏப்ரல் 8 ஆம் திகதி மரணமடைந்தார்.

ஆர்.ஜே

## விஜய் மாணவர் கழகம்




ஜே.டனுஷியா, கோயில் வீதி, புளத்சிங்கள.




கி.சரன்ஜா, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.




எம்.அஸ்ரிப், மக்காமடி வீதி, மருதமுனை - 03.




க.சசிந்திரா, பிஜோ கொட்டேஜ், ஹட்டன்.




ஆர்.ஸ்டீபன், பரிஸ்டர் புர, புத்தளம்.




எம். ரஸா, சியம்பலாகஸ்கொடுவ, கெகுனகொல்ல.




எஃப்.றிஸ்லா றிஸ்வி, பிரதான வீதி, கல்லொழுவை.




என்.எஃப்.சிரோசியா, வவுனியா வீதி, ஹொரவப்பொத்தானை.




ச.சாருஜன், ஞானசூரியம் சதுக்கம், மட்டக்களப்பு.




எம்.இத்ரீஸ், கெபிதிகொல்லாவ, அனுராதபுரம்.

படத்தை இங்கே ஒட்டவும்



விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் இருகோடுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:........................................

முகவரி:........................................

........................................

பாடசாலை:........................................

வகுப்பு:........................................


திகதி:........................................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளவால்களின் வாழ்க்கை முறைமை...









**பறப்பவை அனைத்தும் பறவைகளா? என்ற கேள்விக்கு வெளவால் போன்ற உயிரினம் மட்டும் விதிவிலக்காக இருக்கின்றன. வெளவால்கள் பறந்தாலும் அவை பறவை இனமல்ல என்பது நாம் அறிந்ததே. முதுகெலும்புகளின் பரிணாமத்தில் அவை பறக்கும் தன்மையைக் கொண்டுள்ளன. வெளவால்கள் இரவிலும் சிலசமயம் பகலிலும் பறந்து செல்கின்றன. இவை துருவப் பகுதிகளைத்தவிர, உலகின் ஏனைய அனைத்துப் பகுதிகளிலும் வாழ்கின்றன.**

இவை, சூரியன் மறைந்தவுடன் உணவிற்காக தமது இருப்பிடங்களை விட்டு, வெளியே வருகின்றன. அவ்வாறே, சூரியன் உதிப்பதற்கு முன்பு மறுபடியும் தத்தமது இருப்பிடத்திற்குத் திரும்புகின்றன. இவை இரவுநேர இருளில் மட்டும் உணவிற்காக வெளியே வரும் (Nocturnal) பாலூட்டிகள் என்றே அழைக்கப்படுகின்றன.

## வெளவால்களின் உடலமைப்பு

வெளவால்கள் பறவைகளைப் போன்று பறந்தாலும் அவற்றிற்கு பறவைகளைப் போன்ற இறக்கைகள் கிடையாது. மாறாக; உடலுக்கும் முன்னங்கால்களுக்கும் இடையில் பெட்டாஜியம் (Patagium) என்ற ஒருவகை சவ்வு இணைந்துள்ளது. பாலூட்டிகளில் வெளவால்கள் மாத்திரமே உண்மையாக பறக்க உதவும் இறக்கைகளைப் பெற்றுச் சிறப்படைந்துள்ளன. தாய் மற்றும் இளம் பிராணிகளின் உடல் முழுவதும் மயிர்கள் காணப்படுகின்றன.

குட்டிகள் நேரடியாகத் தனது தாயிடம் இருந்து பாலைக் குடிப்பதுடன், இவை மாறாத உடல் வெப்ப நிலையையும் கொண்டுள்ளன. மார்பு வயிற்றிடை மென்தகடு எனப்படும் உதரவிதானம், மார்பு மற்றும் வயிற்றுப் பகுதிகளை தனித்தனியாகப் பிரிக்கிறது. மேலும், இப்பகுதி சுவாசித்தலுக்கு இன்றியமையாததாகவும் காணப்படுகின்றன.

வெளவால்களுக்கு நான்கு அறைகள் உள்ள இருதயம் உண்டு. இத்துடன், சிறப்பான பொருத்த மனிவளையும் அசுத்த குருதி மண்டலமும் இணைந்துள்ளன. ஏனைய பாலூட்டிகளில் காணப்படுவது போன்று இவற்றிற்கு உட்கரு இல்லாத இரத்தச் சிவப்பு செல்களும் உள்ளன.


## உடல் வெப்பநிலை

வெளவால்கள் மரக்கிளைகளில் தலைகீழாகத் தொங்கும்போது, அவற்றின் உடல்வெப்பம் உயர்வதில்லை. அதிக நேரம் ஓய்வு எடுக்கும்போது, இதன் உடல் குளிர்ச்சியடைகிறது. இதனால், வாயைத் திறந்து கத்துகிறது. மேலும், நடக்கவும் முயற்சி செய்கின்றது. கால்களை நீட்டி உதறி உடலின் வெப்பத்தை உயர்த்திய பின்பு பறக்க ஆரம்பிக்கின்றது. குளிர்காலத்தில் தோலுக்கடியில் சேர்த்து வைத்துள்ள கொழுப்பு மற்றும் சில சுரப்பிகளின் உதவியினால் தொடர்ந்து அநேக மாதங்களுக்கு உணவின்றி நித்திரை கொள்கிறது.


## கால்களின் பயன்பாடு

வெளவால்களின் முன்னங்கால்கள் பறப்பதற்கு ஏற்ப நீண்டு காணப்படுகின்றன. அத்துடன், பெட்டாஜியத்தைக் கொண்டுள்ள இறக்கைகளையும் கொண்டுள்ளன. இவற்றின் விரல்கள் நீண்டுள்ளதால், இவற்றினால் நடக்க முடிவதில்லை. ஆனால், இக்கால்கள் மரத்தில் ஏற அல்லது நகர்ந்து செல்ல உதவுகின்றன. பின்னங்கால்கள் குட்டையாகவும், இவற்றிலுள்ள ஐந்து விரல்களில் கூர்மையான கொக்கி போன்ற நகங்களும் உள்ளன. இவற்றின் உதவியால் பகலில் மரக்கிளைகளில் தொங்கி இவை ஓய்வெடுக்கின்றன. பின்னங்கால்களில் உள்ள முழங்கால் (Knee) பின்புறம் நோக்கி உள்ளது. இந்த அமைப்பு ஏனைய பாலூட்டிகளில் இருப்பதைவிட, மாறுபட்டுள்ளதால் வெளவால்களால் நேராக நிமிர்ந்து நிற்கவோ, நடக்கவோ முடிவதில்லை.

அத்தோடு, வெளவால்களின் மூக்கு, தலை, காது மடல்கள் என்பன பாலூட்டிகளில் உள்ளது போலவே உள்ளன. மார்பெலும்பு கத்தி போலுள்ளமை ஒரு விசேட அம்சமாகும்.





## வெளவால்களின் உணவு

பழவகைகள், பூவிலுள்ள மது, நண்டு, மீன், பூச்சி, புழு முதலியவற்றை வெளவால்கள் பெரிதும் விரும்பி உண்கின்றன. சில வெளவால் இனம் தம் வாயிலுள்ள ஊசிபோன்ற கூர்மையான பற்களினால் கடித்து, நாக்கின் உதவியால் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கின்றன.மேலும், இவை குதிரை, கழுதை, பசுக்கள் ஆகியவற்றைக் கடித்து அவற்றின் குருதியை குடிக்கின்றன. வெளவால்கள் பழங்களை உண்பதால் பழவிதைகள் பல இடங்களுக்குப் பரவி அங்கெல்லாம் அப்பழவகைகளுக்குரிய மரங்கள் வளர்வதற்கு பெரும் துணையும் புரிகின்றன.

## குட்டிகள்

சில வெளவால்களுக்கு ஒரு பால் சுரப்பியும் வேறு சில வெளவால்களுக்கு இரண்டு பால் சுரப்பிகளும் மேலும் சிலவற்றில் பல சோடி பால்சுரப்பிகளும் அவற்றின் மார்புப் பகுதியில் காணப்படுவதுடன், வேறு சில வெளவால்களுக்கு வயிற்றுப் பகுதியிலும் பால் சுரப்பிகள் அமைந்துள்ளன. இவற்றிற்கு டிஸ்கோய்டல் மற்றும் ஹீமோ கோரியல் வகை கருப்பை உள்ளது. வெளவால்கள் குட்டிகளை ஈனுகின்றன. குட்டிகள் கருப்பையில் முழுவளர்ச்சி அடைந்த பின்னரே, பிறக்கின்றன. ஒரு நேரத்தில் ஒரு குட்டி மட்டும் பிறக்கின்றது. கூர்மையான பற்கள் மற்றும் நகங்களின் உதவியால் குட்டிகள் தாயின் வயிற்றுப் பகுதியைப் பிடித்துத் தொங்குகின்றன.

## வெளவாலின் சக்தி மிகு காதுகள்

வெளவால்கள் பார்க்கும் திறனைக் குறைந்த அளவில் கொண்டிருப்பதால் இவை பெரும்பாலும் தமது காதுகளை நம்பியே வாழ்கின்றன. மிக மெல்லிய சத்தத்தையும் வெளவால்களின் காதுகள் மிகத் துல்லியமாக உணர்கின்றன. அதன்மூலம் ஒரு பொருள் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்பதை வெளவால் அறிந்து கொள்ள முடிகின்றது.

## 60 மில்லியன் கால வரலாறு

பரிணாம வளர்ச்சிப்படியை நோக்கினால் வெளவால்கள் சுமார் 60 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஈயோசின் (Eocene) காலத்தில் பறக்கும் தகவமைப்புடன் தோன்றின எனத் தெரிகிறது. ஆரம்ப காலத்திலேயே, இவை தற்போது வாழும் வெளவால்களைப் போலவே காணப்பட்டன. இவை 'டெர்மோப்டிரா' என்ற பிராணிகளுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளன. வெளவால்கள் பலவித காலநிலை சூழ்நிலையில் வாழுந்தன்மை கொண்டமையால் ஆர்ட்டிக், அந்தாட்டிக்கா கண்டங்களைத் தவிர, ஏனைய அனைத்துப் பிரதேசங்களில் அதிகம் வாழ்வதோடு, ஒப்பீட்டு ரீதியில் இவற்றின் தொகையும் மிக அதிகமாகும்.


-ஜெய்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷ வாயுக்களை மோப்பம் பிடிக்கும் கைபேசி

சில நச்சுத்தன்மைகள் காற்றில் அதிகரித்து வருவது சாதாரணமான விடயமாகி வருகின்றது. இத்தகைய ஆபத்துகளில் இருந்து உங்களைக் காப்பாற்ற வருகிறது







மோப்பம் பிடிக்கும் மொபைல் போன்கள். 'எலக்ட்ரோனிக்' மூக்கு எனப்படும் நவீன உணர் கருவி ஒன்றே இதுபோன்ற ஆபத்துகளை இனங்கண்டு எச்சரிக்கின்றது. இந்தக் கருவியை தற்போது கைப்பேசியுடன் இணைத்து வழங்குகிறது 'ஹோம்லேண்ட் செக்யூரிட்டி சயின்ஸ் அன்ட் டெக்னாலஜி, என்ற அமெரிக்க நிறுவனம். இந்த 'செல்-ஆல்' என்ற நவீன சென்சார் கருவியை இந்த நிறுவனமே தயாரித்துள்ளது. இதனைக் கைப்பேசியில் பொருத்துவதன்மூலம் காற்றில் நச்சு ஆபத்துகள் அல்லது நமக்குத் தீமை விளைவிக்கும் விஷ வாயுக்களைக் கண்டறிந்து அது எச்சரிக்கை ஒலியை எழுப்புகின்றது.

இக்கருவி பலமாக ஓசை எழுப்பி உங்களை மட்டுமல்லாது சுற்றி இருப்பவர்களையும் உஷார்படுத்துகின்றது. எந்த இடத்தில் இந்த நச்சுவாயு பரவி இருக்கிறது என்ற தகவலையும் அவசர உதவி மையத்துக்கு அனுப்பி வைக்கின்றது. பயனுள்ள இக் கருவி மிகச்சிறியதாக மிகக் குறைந்த விலையில் கிடைக்க வேண்டும் என்பதே தமது நோக்கம் என இதைத் தயாரித்த நிறுவனம் கூறுகிறது. அதற்கேற்ப, இதன் விலையும் ஒரு அமெரிக்க டொலருக்கும் குறைவாகவே காணப்படுகின்றது.

# கொள்ளளவு கூடிய ஃபைல்ஸ்களை இலவசமாகப் பரிமாற வழிமுறை




கணினி பாவனையின் போது ஃபைல்களை (Files) அனுப்புவதற்கோ, பெற்றுக்கொள்வதற்கோ மின்னஞ்சல்களை (e-mail) நாம் பயன்படுத்துவதுண்டு. ஆனால், இவ்வாறு e-mail மூலமாக குறைந்த கொள்ளளவைக் கொண்ட file களையே 'Attach' செய்து அனுப்பவோ அல்லது பெறவோ முடியும்.

ஆனால், 100mb வரையிலான கொள்ளளவைக்கொண்ட fileகள் வரை இலவசமாக அனுப்பவோ, பெறவோ கூடிய வகையிலான வசதியைக்கொண்ட இணையத்தளமொன்று அறிமுகத்தில் உள்ளது. mediafire.com என்பதே இந்த இணையத்தளத்தின் முகவரியாகும். இங்கு தேவையான image, video, exe, zip ஆகிய வகையைச் சேர்ந்த எந்தவொரு fileகளையும் Upload செய்துகொள்ள முடியும்.

இவ்வாறு upload செய்ததும் அந்த fileக்குரிய download Link நமக்கு வழங்கப்படும். இந்த linkஐ e-mail செய்வதன் மூலமோ அல்லது நமக்குரிய இணையத் தளத்தில் சேர்ப்பதன்மூலமோ upload செய்த fileஐ download செய்து கொள்ளலாம். இந்த இணையத்தளத்திற்கான முகவரி: http://www.mediafire.com.



# இணையத்தளத்தின் இலவச சேவை



Video க்களை இணையத்தளத்தில் இலவசமாகப் பகிர்ந்துகொள்ளக்கூடிய வசதியினை பல இணையத்தளங்கள் நமக்கு வழங்கி வருகின்றன. அத்தகைய இணையத்தளங்களில் ஒன்றுதான் 'daily motion.com' என்ற இணையத்தளமாகும். இந்த இணையத்தளத்தில் தினந்தோறும் பலவகையிலான video க்களை upload செய்யப்படுவதுடன், அவற்றை அந்த இணையத்திலிருந்தே பார்க்கக்கூடிய வசதி காணப்படுவதுடன், நம்மிடமுள்ள video க்களை upload செய்துகொள்ளவும் முடியும்.

20 நிமிட அளவைக் கொண்டதும், 150mb வரையிலான கொள்ள ளவைக் கொண் டதுமான video க்களைக் கூட upload செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை இந்த இணையத் தளத்திலுள்ள சிறப்பம்சமாகும். இந்த இணையத் தளத்தின் முகவரி: http://www.daily motion. com.







இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2011, நவம்பர் மாதம் 16 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday November 16, 2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org